விலை ரூபா: 15.00
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii
சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 16 ஞாயிற்றுக்கிழமை (30.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தாக்கல்

## 30 மில்லியன் டொலர் நட்டஈடு கோரி!

(வாஷிங்டன்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வன்னி இறுதிக் கட்டப் போரின்போது சர்வதேச போர் நியமங்களுக்கு எதிராக சிறிலங்கா படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கைகளுக்காக 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டஈடு கோரி அமெரிக்காவின் வாஷிங்டன் மாவட்ட நீதிமன்றத்தில் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## உயர்பாதுகாப்பு வலயம் குறித்து ஐ.நா. அரசாங்கத்துடன் பேச்சு

(கொழும்பு)

கிழக்கு மாகாண உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரமவுடன் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவன அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களினால் இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவன (20ஆம் பக்கம் பார்க்க)

## தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை கையளிக்க தேர்தல் ஆணையாளர் பணிப்பு!

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு என தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களையும் தேர்தல்கள் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக அனைத்து தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த வேட்பு மனுக்களை தேர்தல்கள் செயலகத்தில் கையளிக்குமாறு அறிவுறுத்தியுள்ள தயானந்த திஸநாயக்க, வேட்பாளர்களுடைய போட்டி இலக்கம் வர்த்தமானி ஊடாகப் பிரசுரிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து வேட்பு மனுக்களையும் பரிசீலித்ததன் பின்னர் அடுத்த வாரம் அளவில் போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கப்படும்.

மார்ச் மாதம் 17ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ள 301 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகளிடமிருந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு-ஜனாதிபதி விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பேச்சுவார்த்தைகள் கடந்த 21ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் ஜனாதிபதியின் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈபிடிபியின் முக்கிய உறுப்பினர் வீதியிலிருந்து சடலமாக மீட்பு

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஈபிடிபி அமைப்பின் மருதங்கேணி பகுதிகளுக்கான பொறுப்பாளரும் வன்னியிலிருந்து மீளக் குடியமர வந்த மக்களுக்கான நலன்புரி அமைப்புக்கான பிரமுகருமான 36 வயதுடைய இராசரத்தினம் சதீஸ் நேற்று காலை படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கிற்கு செல்லும் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் ஆனைவிழுந்தானை அண்டிய சுடலைப் பகுதியில் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று மேற்கொள்ளவிருந்த விஜயம் ஒன்று தொடர்பான ஏற்பாடுகளுக்காகச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இவர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பணத்துக்காக வழக்குத் தாக்கல்; இலங்கை அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்ற விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பணத்துக்காக இத்தகைய வழக்குகளை தாக்கல் செய்வதாக குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பணிப்பாளர் பந்துல ஜயசேகர இத்தகைய செயல்களுக்கு பதிலளிப்பதற்கு தமக்கு நேரமில்லை (20ஆம் பக்கம் பார்க்க)

CANADA
Rs. 3/-
செக்கன் அடிப்படையிலான கட்டண அறவீடு
MY10 + 5 IDD இனை செயற்படுத்த அழையுங்கள் 676 அல்லது ரூ. 177/- ற்கு ரீலோட் செய்யுங்கள்
Dialog

## புலிகளின் ஆதரவாளர்களால் அரசை பணிய வைக்க முடியாது


### இலங்கைத் தூதுவர் அறிக்கை

(வாஷிங்டன்)

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களால் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையோ அல்லது அரசாங்கத்தையோ அடிபணிய வைக்க முடியாது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானியர் ஜாலிய விக்ரமசூரிய நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தமது தனிப்பட்ட அமெரிக்க பயணத்தை பாதுகாப்பாக மேற்கொண்டு இலங்கை சென்றதன் பின்னர் இந்த அறிக்கை விடுக்கப்பட் (20ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Study & Work in UK and Canada



Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## வயோதிபத் தம்பதியினர் மீது புங்குடுதீவில் தாக்குதல்

புங்குடுதீவு 10வட்டாரத்திலுள்ள வீட்டில் தனித் திருந்த வயோதிப தம்பதிகள் இருவர் இனந் தெரியா தோரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. இதில் சுவாமிநாதன் (வயது 72), அவரது மனைவி வரதலக்சுமி (வயது 65) ஆகிய இருவருமே தாக்கப்பட்டவர்களாவர்.

நேற்று முன்தினம் இரவு குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்ற நால்வரே இவர்களைத் தாக்கியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக ஊர் காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் நேற்றுக்காலை மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் தொடர் பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப் பட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ச-5)


## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியா பார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌர வத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

(C-2290


# தமிழ் மொழியை நடைமுறைப்படுத்தாத அரச ஊழியர்கள் மீது நடவடிக்கை!

## அமைச்சர் வாசுதேவ அறிவிப்பு

இலங்கையில் அரச கருமமொழிகளில் ஒன்றாக காணப்படும் தமிழ் மொழியை அரச திணைக்களம் மற்றும் அரச நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தாது உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மொழி கள் மற்றும் நல்லுறவு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் தனியே பதவி மற்றும் சம்பள உயர்வுக்காக தமிழ் மொழி யைக் கற்று விட்டு அதனை பெற்றுக் கொண்ட பின்னர் அதனை நடைமுறைப் படுத்தாது இருக்கின்றனர்.

இவ்வாறான அதிகாரிகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு விசேட உளவுப்பிரிவு அடங்கிய குழுவொன்றை நிய மிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்கள் கண்டறியப்படுவது டன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டங்களும் உள்ளன. அச் சட்டங்களின் பிர காரம் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய வுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 2011ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் யாவும் பூர்த்தியடைந்து விட்டன. இத் திட்டங்களில் அரச கரும மொழிகளான தமிழ் மற்றும் சிங்கள மொழிகளை நடை முறைப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக் கப்பட்டிருக்கின்றது.

தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் அமைப்புக்களை அமைத்து மொழி இணக் கப்பாட்டுடன் வாழ்வதற்கான செயற்றிட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் அரச கரும மொழிகளை நடை முறைப்படுத்தாதோரை கண்டறிய விசேட பொலிஸாரை நியமிப்பது தொடர்பில் பொலிஸ் மா அதிபருடன் பேசவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## குருதி நன்கொடை வழங்கும் நிகழ்வு

(சித்தன்கேணி)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகத்தினால் குருதி நன்கொடை வழங்கல் நிகழ்வு இன்று பிற்பகல் 2மணியிலிருந்து மாலை 6மணி வரை இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் குருதி கொடையாளர்களை கலந்து கொள்ளுமாறு சித்தன்கேணி இளை ஞர் முன்னேற்ற கழகத்தின் நிர்வாகிகள் அறி வித்துள்ளனர். (ச-17)

# எல்லாம் தங்களுக்கு தெரியுமென்று ஊடகவியலாளர்கள் நினைக்கக் கூடாது

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு



ஊடகவிய லாளர்கள் தம க்கு எல்லாம் தெரியும் என ஒரு போதும் நினைக்கக் கூடாது என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலியரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை பண்டாரநாயக்க சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஊடக பயிற்சி பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.


அப்படி ஊடகவியலாளர்கள் நினைத்தால் முன்னோக்கி செல்ல முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். ஊடகவியலாளர்கள் எப்போதும் தமது அறிவை வளர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். சர்வதேச ஊடகங்களுடன் ஒப்பிடும் போது எமது ஊடகங்களும் ஊடகவியலாளர் களும் முன்னிலையில் உள்ளனர்.

ஊடகத்துறை அமைச்சும் அரச தகவல் திணைக்களமும் இணைந்து ஊடகவியலா ளர்களுக்கு ஏற்பாடு செய்த ஒரு நாள் பயிற்சி பாசறை நேற்று சனிக்கிழமை பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சின் செய லாளர் டபிள்யூ.பி.கனேகல மற்றும் அரசதகவல் திணைக்களபணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்ன எதுகல ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சி பாசறையில் சிரேஷ்ட ஊடகவிய லாளர்களான விக்டர் ஐவன், எம்.எஸ்.எம். ஐயூப், காமினி சுமனசேகர மற்றும் பேராசிரியர் புஞ்சிநிலமே மீகஸ்வத்த ஆகியோர் விரிவுரை நடத்தினர். (ச-5)





டாக்டர் பால் தினகரன் மற்றும் குடும்பத்தினரின் தேவ செய்தி மற்றும் ஜெப பிரார்த்தனைத் திருவிழா நேற்று நடைபெற்றது.

இதில் சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்படுவதையும், பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்-எஸ்.கரன்)


## STUDY IN UK

**IELTS இன்றி O/L உடன் UK செல்ல அரிய சந்தர்ப்பம்**
**April இல் மாறும் கடுமையான விதிகளுக்கு முன் விரைவான சேவை**

மொத்த செலவு 7 லட்சம் மட்டுமே

- மிக விரைவான நம்பிக்கை மிக்க சேவை (40 நாட்கள்)
- College அனுமதிகள் நேரடியாக பெற்றுத் தரப்படும்
- நாம் குறிப்பிடும் காலப் பகுதியினுள் லண்டன் செல் லாவிட்டால் உங்கள் சகல பணத்தினையும் மீளப் பெறலாம்.
- நீங்கள் வழங்கும் சகல பணத்திற்கும் அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும்.

**எம்முடன் இணையும் மாணவர்களுக்கு கடவுச்சீட்டு, சான்றிதழ்கள் என்பன இலவசமாக ஒரு நாளில் பெற்றுக் கொடுக்கப்படும்.**

- கல்லூரிக் கட்டணத்தை நாமே செலுத்தி CAS NO. இரண்டு நாட்களில் பெற்றுத் தரப்படும்.
- கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் உடன் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(3605)

தொடர்புகளுக்கு: Sana 0776277767

## தேவை

பொதி செய்யக்கூடிய, உணவுப் பொருட்களை (அப்பளம், மிக்ஸ்சர், மிளகாய் பொரியல் மற்றும் பல) தயாரிக்கக்கூடிய அனுபவமுள்ளவர்கள் தேவை.

T.P. 0771566661

(3594)

## பெயர் மாற்ற அறிவித்தல்

உடுவில் றோட், பெரியபுலம், மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த குலசேகரம் மாறேதாஸ் ஆகிய நான், எனது பெயரை குலசேகரம் கிரிகரன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத் தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு
கு.கிரிகரன்

(3603)

## செல்லா சினிமா




ஆடுகளமா அசத்துறானய்யா...நம்மா[illegible]..

காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30

## சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல் வாதம், நீரிழிவு, சிறுநீரக அழற்சி, சூதகவலி, பாலியல் குறைபாடு வெள்ளைபடுதல், அதி இரத்த அமுக்கம், நெஞ்சுக்குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற்பருமன், மெலிவு, கிரந்தி-கரப்பன், கணை, குளோ கோமா, இளநரை, பொடுகு சோரியாசிஸ் முதலான சகல நோய்களுக்கும் பேரறிஞர் Dr.K. பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை, 1ம், 2ம், 3ம், 4ம், 5ம், திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசிதொடர்பு
0777047371,
0757390195,
0771005971

Dr.K. சிவானந்தன்
ஆனந்தா வைத்திய நிலையம்
காவல்துறை முன்பாக,
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

(3602)

# சிறுவர், முதியோர் தினத்தையொட்டிய கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்,முதியோர் தினத்தையொட்டி யாழ் நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் முதலாம் இடத்தை திருமதி. மாலாதேவி மதிவதனன் (பங்குனியன் வளவு அளவெட்டி மத்தி), இரண்டாம் இடத்தைப் டயானா தர்மபுத்திரன் (சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்), மூன்றாம் இடத்தை குமர குலசிங்கம் விமலன் (ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோர் பெற்றுள்ளனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு கொள்ளைகளுடன் தொடர்புடைய பலர் கைது

(கொழும்புத்துறை)

## யாழ்ப்பாண பொலிஸார் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் இடம் பெற்று வரும் கொள்ளைச் சம்பங்களுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டு வருவதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கும் சிறுசிறு திருட்டு குழுக்களுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு துணிகரக் கொள்ளைகளில் ஈடுபட்டு வரும் தலைமையை விரைவில் கைதுசெய்ய முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகளை யாழ்.விசேட பொலிஸார் மற்றும் கோப்பாய் விசேட பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை விரைவில் மக்களுக்கு இனங்காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-51)

# வாரம் ஒரு தகவல்

## அழகுமுகம்

"என்னுடைய பேர்சனாலிட்டியை பற்றி என்ன நினைக்கிறாய்?"

"அதையெல்லாம் நினைத்து பார்த்திருந்தால் நம்ம கல்யாணமே நடத்திருக்காது தெரியுமா?

"என்ன... கிண்டலா? என் முகத்தைப் பார்த்துவிட்டு சினிமாவில் நடிக்க வாறியா? என்று கூட நாலைந்து தயாரிப்பாளர்கள் வந்து கேட்டார்கள். நான்தான் அதெல்லாம் வேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டேன்"

"ரொம்பத்தான் ரீல் விடாதீங்க. எனக்கு மனோதத்துவமெல்லாம் தெரியும். அதனால் உங்களுடைய பேர்சனாலிட்டி என்னவென்பது எனக்கு நன்றாகத் தெரியும்"

"என்ன தெரியும்? சொல் பார்க்கலாம்"

"உங்களை மாதிரி உள்ளவர்களை ஆங்கிலத்தில் 'நாசிஸ்டிக் பேர்சனாலிட்டி'என்று சொல்வார்கள்"

"அப்படியானால்?"

"கிரேக்க இதிகாசத்தில் 'நாசி'என்று ஒருத்தன் இருந்தான். அவன் தண்ணீரில் தன்னுடைய முகத்தைப் பார்த்து விட்டு ஆகா! நாம எவ்வளவு அழகாக இருக்கிறோம் என்று கர்வமாக நினைத்துக் கொண்டு, தன்னுடைய அழகுக்கு தகுந்தாற்போல் ஒரு துணை வேண்டுமென்று உலகம் குழுவதும் தேடிப்பார்த்து விட்டு, அப்படி யாரும் கிடைக்காததால் மனமுடைந்து கடைசியில் தற்கொலை செய்து கொண்டானாம்."

"நானும் அதுமாதிரி என்கிறாயா?"

"உங்களை மாதிரி நிறையப் பேர் உண்டு. தன்னைப் பற்றி மிகவும் பெருமையாக நினைப்பது. மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும். மரியாதை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது. இப்படிப் பட்டவர்களுக்கு நல்ல உறவுகளே நீடிக்காது."

"நான் அப்படியில்லை. நான் அழகாக இருப்பதுபோல் என்னைச் சுற்றியிருப்பதும் அழகாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பவன். அதனால்தான் நம்முடைய வீட்டுச்சுவர் முழுவதும் அழகான படங்களை வாங்கிவந்து மாட்டி வைத்திருக்கிறேன்"

"ரொம்ப அழகுதான்"

"அதுசரி, இதோ இந்தப்படம் ஏது? நீ வாங்கி வந்தாயா? அழகாக இருக்கும் படங்களுக்கு மத்தியில் இது எவ்வளவு அசிங்கமாக இருக்கிறது. முதலில் இதைக் கழற்றி எறி"

"அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாது?"

"அது படம் இல்லை. முகம் பார்க்கும் கண்ணாடி"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பொதுக்கூட்டம்

(பொலிகண்டி)

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மகாசபையின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு தலைவர் பா. உதயகுமார் தலைமையில் ஆலயமுன்றலில் நடைபெறவுள்ளது.

இதன் போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படுவதுடன் கடந்த ஆண்டறிக்கை, வரவு- செலவு கணக்கறிக்கைகள் என்பன சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இக்கூட்டத்திற்கு அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு ஆலயதர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

★ ★ ★

பொலிகண்டி பியலம்பற்றை வீரபத்திரர் ஆலய அவசர விசேட பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமைமாலை7மணியளவில்ஆலயமுன்றலில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் வ.துங்கராசாதலைமையில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சுவாமி தீர்த்தமாடுவதற்காக கடற்கரைக்கு கொண்டு செல்வது தொடர்பான முக்கிய தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளதால் அனைத்து அடியார்களையும் இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

★ ★ ★

பொலிகண்டி சல்லியம்பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் வருடாந்த மகோற்சவ ஆலோசனைக் கூட்டமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் உபயகாரர்கள், அடியார்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

★ ★ ★

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சுவீதி அகிலாண்டம் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நிலைய தலைவர் திருமதி உ.சண்முகநாதன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. மாலினி தங்கராசா கலந்து கொள்ளவுள்ளார்.

கூட்ட நிறைவில் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று பொதுச் செயலாளர் திருமதி க. ஸ்ரீ துசாந்தி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# இராசி பலன்

30.01.2011
(தை 16, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
ஏகாதசி காலை 6.49 மணி வரை
துவாதசி பின்னிரவு 6.26 மணிவரை
கேட்டை முற்பகல் 10.57 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணி வரை
சுபநேரம் 9.36-11.06 மணி வரை
ஏகாதசி விரதம்

**மேடம்** குழப்பங்கள் தீர குருவை வழிபட வேண்டிய நாள், உற்றார் உறவினர்களின் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுப்பீர்கள், விருந்து, விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், உடல் நலம் சீராகும், தொழில் வளர்ச்சி கருதி நல்ல முடிவெடுப்பீர்கள், பகை மாறும், வீட்டை அழகு படுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** பூர்வீக சொத்துக்களால் சிறு வருமானங்கள் கிடைக்கலாம், விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து சிறப்படையும் நாள்.

**சிங்கம்** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்பினைக் காணும் நாள், வாகன சுகமுண்டு, சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி** எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும், உடன் பிறப்புக்கள் கூட உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் சில நன்மைகள் கிடைக்கலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரும் வாய்ப்புண்டு, எதிர்பாராத தனவரவு இல்லம் தேடி வரலாம்.

**விருச்சிகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், குடும்ப உறுப்பினரை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தை விடா முயற்சியால் நிறைவேற்றுவீர்கள், சுபசெலவுகள் ஏற்படலாம்.

**தனுசு** மாற்றங்களால் நன்மையடையும் சூழ்நிலை உருவாகும்,தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், பிரயாணங்களால் சலிப்படைய நேரிடும்.

**மகரம்** சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், புதிய முயற்சிகள் சாதகமாக அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், அந்நியர் உதவியுண்டு, கௌரவமான நாள்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தொழில் ரீதியான பயணங்கள் வெற்றியளிக்கும், தந்தை வழி உறவில் நன்மையுண்டு.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 190 | 180 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 300 |
| தக்காளி | 80 | 60 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 80 | 100 |
| கரட் | 120 | 110 | 110 |
| பூசணி | 40 | 30 | 35 |
| புடோல் | 100 | 70 | 100 |
| வாழைக்காய் | 50 | 35-40 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 240-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 150 | -- | 150 |
| வெண்டிக்காய் | 120 | 80-90 | 90 |
| கரணைக்கிழங்கு | 50 | 40-45 | 50 |
| பயிற்றங்காய் | 180 | 150 | 190 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 120 | -- | 140 |
| கறிமிளகாய் | 200 | -- | 280 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 140 | 120 | 150 |
| கத்தரி தம்புள்ள | 140 | 130 | 150 |
| கீரை - 1 பிடி | 20 | 10-15 | 30 |
| தேசிக்காய் | 80 | 30-40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-60 | 50 |








523 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று தென்மராட்சி பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதில் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க பாடசாலை மாணவியொருவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதையும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ஸ்ரீரங்கா சண்டெல் தொலைபேசியை வழங்குவதையும் விருந்தினர்கள் இணைந்து துவிச்சக்கரவண்டிகளை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# காட்டுப்பன்றிகள் மற்றும் கட்டாக்காலி மாடுகளால் விவசாயத்திற்கு பாதிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(பூநகரி)

பூநகரி பிரதேசத்திலுள்ள விவசாயக் கிராமங்களான மட்டுவில்நாடு, பரம்பன் கிராய், பள்ளிக்குடா, கறுக்காய்தீவு ஞானிமடம் ஆகிய கிராமங்களில் நன்றாக விளைந்துஅறுவடைக்கு தயாரான நெல்வயல்களுக்குள் காட்டுப்பன்றிகள் இரவு வேளையில் புகுந்து பெரும் அழிவை ஏற்படுத்தி வருகின்றன.

இதே நேரம் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இந்தக் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு கமநல குழுக்கள் பிடியாளர்களை நியமித்து அவர்கள் மூலம் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன. ஆனால் தற்பொழுது இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படாமல் உள்ளது.

இது சம்பந்தமாக கடந்த 11ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் காட்டுப் பன்றிகளால் விவசாயம் பாதிப்படையும் நிலை பற்றி விவசாய பிரதி நிதிகள் கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

இக்கூட்டத்தில் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரிகள், இராணுவத்தளபதிகள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் இது தொடர்பான கருத்துக்கள் முன் வைக்கப்பட்ட போதும் இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது என கூறியுள்ளனர். இதனால் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-84)

# சிறப்பு பட்டிமன்றம்

வெள்ளவத்தை இந்து சமய கலாசார வளர்ச்சி பணிமன்றம் நடத்தும் பொங்கல் விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு பணி மன்றத்தின் தலைவர் திருஞானசம்பந்தர் தலைமையில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக சொல்லின் சிகரம் பொன்.சுகந்தன் தலைமை தாங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-3)

# தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு இராணுவத்தினரால் வாழ்வாதார உதவிகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நேற்று தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் வைத்து இராணுவத்தினரால் பல உதவிகள் வழங்கப்பட்டன.

இதன் படி தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் நூறு பேருக்கு பாடசாலை உபகரணங்கள்,10 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியாக கோழிக்குஞ்சுகள்,335 குடும்பங்களுக்கு 5 தென்னங்கன்றுகள் வீதம் மொத்தம் ஆயிரத்து 5 கன்றுகள், தொலைத்தொடர்பு வசதிகளை வழங்கும் நோக்குடன் 50 குடும்பங்களுக்கு சண்டெல் நிறுவனத்தின் அனு சரணையுடன் 50 சண்டெல் தொலைபேசிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பெற்றோர்களின்கோரிக்கைகளுக்கு அமைவாக 50 துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்பட்டன.

இத்தகைய உதவிகளை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.சிறிரங்கா ஆகியோர் வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக இராணுவத்தினரால் இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-6)

# இலங்கையில் வருடாந்தம் 6 ஆயிரம் பேர் தற்கொலை

(கொழும்பு)

இலங்கையில் தற்கொலைகளைத் தடுப்பதற்கு விசேட அறிவுறுத்தல்களை வழங்கத் தேவையேற்பட்டுள்ளதாக உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் இது குறித்து தெரிவிக்கையில்,

இலங்கையில் வருடாந்தம் 6 ஆயிரம் பேர் வரை தற்கொலை செய்து கொள்வதாகபுள்ளிவிபரங்கள் சான்று பகர்வதாகவும் இதனை கட்டுப்படுத்துவதற்கான அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# புலிகளுடன் தொடர்புடைய பாகிஸ்தான் பிரஜை கைது

(கொழும்பு)

லக்ஷ்ர் ஈ தொய்பா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு போலி கடவுச் சீட்டுக்களை தயாரித்த பாகிஸ்தான் பிரஜையொருவர் ஸ்பெயினில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அல்கொய்தா, லக்ஷ்ர் ஈ தொய்பா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட பல பயங்கரவாதக் குழுக்களுக்கு போலி ஆவணங்களை விநியோகித்ததாகக் கூறப்படும் பாகிஸ்தான் பிரஜையொருவர் பார்ஸிலோனா நகரில் வைத்து ஸ்பெயின் தேசிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் இம்தானன் மலிக் சர்வார் எனவும் கடந்த 13 ஆம் திகதி பாகிஸ்தானின் சியால்கொட் நகரில் பிறந்தவர் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கடும் மழையால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது

(கொழும்பு)

கடும் மழை காரணமாக பராக்கிரம சமுத்திரம் மற்றும் கவுடுல்ல நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் அவசர கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக மகாவலி கங்கையின் நீர் மட்டம் சற்று உயர்ந்துள்ளது. இந்த நிலையில் பொலனறுவை, மட்டக்களப்பு வீதியில் சில இடங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் கிழக்கு, மத்திய ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் மழை எதிர்பார்க்க முடியும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)


# மரண அறிவித்தல்



## இராமு சுப்பிரமணியம் (சின்னத்தம்பி)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சுப்பிரமணியம் (சின்னத்தம்பி) 27.01.2011 வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு- அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி-இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், கனகம்மா மற்றும் நாகரத்தினம், கேதாரம், நாகேஸ்வரி, லோகேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் பிரான்சை வசிப்பிடமாகக் கொண்ட செந்தில்குமார், சதீஸ்குமார், நிதிமலர், ரவீந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரான்ஸில் வசிக்கும் புனிதவதி, றஜீனா, இந்திரகுமார், வாசுகி (பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனும் டினேஷ், ஆகாஷ், அபிஷேக், விதுஷா, நிதிக்ஷா, இசிகா அபினன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

596/05, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி.
தொ.பே : 021 4925561

தகவல்
மனைவி, பிள்ளைகள்

(ஓ-1072)

# நாட்டின் கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும வலியுறுத்தல்



(கொழும்பு)

அரசியல்வாதிகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் தவறான முடிவுகளால் பிள்ளைகளும் தவறுகளைச்செய்வதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தெவிநுவர பகுதியில் நடைபெற்ற வைப மொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

அரச தலைவர்கள் நாட்டின் கல்வி முறையை மாற்ற வேண்டும் என்று தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாக தெரிவித்த அமைச்சர், தச்சு ஊழியரின் பிள்ளைகள் தச்சனாகவும், கடற்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவரின் பிள்ளை கடற்தொழிலாளியாகவும் உருவாகும் கல்வி முறைமை தற்போது உள்ளது எனவும் கூறினார்.

இந்த நிலைமை ஏற்படுவதற்கு அரசியல் வாதிகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களே காரணகர்த்தாக்கள் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பிள்ளைகள் தவறான வழியில் செல்வதைத் தடுப்பதற்கான பொறுப்பு குறிப்பிட்ட மூன்று தரிப்பினரிடையே உள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி அதிருப்தி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனுக்கள் பல நிராகரிக்கப்பட்டமை குறித்து கட்சியின் வேட்பாளர் நியமன சபை உறுப் பினர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை அலரி மாளிகையில் சந்தித்து தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் விட்டுக் கொடுக்க வேண்டாம் எனவும் இழப்புகளை குறைப்பதற்காக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஐ.ம.சு.முன்னணியின் சிரேஷ்ட தேர்தல் அமைப்பாளர்களை ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை தமது கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக வழக்குத் தொடுக்கவுள்ளதாக ஐ.ம.சு. முன்னணி பொதுச்செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தொழுநோய் வைத்தியசாலையில் அரும்பொருள் காட்சியகம்

(கொழும்பு)

கெந்தன தொழுநோய் வைத்தியசாலையில் அரும்பொருள் காட்சியகம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பாலித மகிபால தெரிவித் துள்ளார்.

இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள உலக தொழுநோய்த் தினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

1708ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை சுமார் 300 வருடங்கள் பழைமையான தொல்பொருள் இடமாக காணப்படுகின்றது.

தெற்காசியாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழுநோய் வைத்தியசாலை இதுவாகும். மானிட பரிணாம வளர்ச்சி ஆரம்பமானது தொடக்கம் காணப்பட்டுவரும் தொழுநோய் முதல் தடவையாக 1685ஆம் ஆண்டு ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தின் போது இலங்கையில் இனம் காணப்பட்டது.

1901ஆம் ஆண்டு தொழுநோயாளர்கள் அவசியமாக ஆயுட்காலம் முழுவதும் வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட வேண்டும் என தொழுநோய் கட்டளைச் சட்டத்தை ஆங்கிலேயர்கள் இங்கு அறிமுகப்படுத்தினர்.

1950ஆம் ஆண்டளவில் டெப்சோன் சிகிச்சை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி மருத்துவப்பரிசோதனையின் கீழ் சமூகத்தில் சாதாரண மக்களை போல் தொழுநோயாளர்களும் வாழக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியது.

தொழுநோய்க்கு முழுமையான சிகிச்சையைப் பெறுவதன் மூலம் அந்த நோயை குணப்படுத்த முடியும் என டாக்டர்பாலித மகிபால தெரிவித்தார். (ஸ்ரீ-9)


## ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் பதவி வெற்றிடங்கள்

இலங்கையின் உறுதியானதும், பாரியதுமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது, நாடளாவியரீதியில் பரந்து, தொழில்நுட்பத்துறையில் மிகுந்த தேர்ச்சியும், 49 வருடகால அனுபவமும் கொண்டு இலங்கை மக்களின் காப்புறுதித் தேவைகளை பரிபூரணமாய் நிறைவேற்றி வருகின்றது. இந் நிறுவனத்தில் இணைந்துகொள்ள தமிழ் பயிற்சியாளர்களுக்கான தொழில்வாய்ப்பு காத்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

### கிளை விற்பனை முகாமையாளர்

(சாவகச்சேரி, சங்கானை, மன்னார், முல்லைத்தீவு)

நீங்கள் கிளையின் வர்த்தக அபிவிருத்தியிக்கு பொறுப்பாக இருப்பதுடன் உங்களின் முகாமைத்துவ ஆலோசனைகளை நிறுவனத்தின் சிரேஷ்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க முடியும். உங்கள் தொழில் தன்மை பிரகாரம் நீங்கள் வர்த்தக இலக்குகளை தீர்மானம் செய்து அவ்விலக்கினை எய்தல் வேண்டும். மேற்கூறிய வர்த்தக இலக்குகளை அடைய விற்பனையணியொன்றை தெரிவு செய்து ஊக்கப்படுத்தி அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

தேவையான மேலதிக தகைமைகள்:

- முழு, பகுதி SLIM அல்லது CIM டிப்ளோமா தகமை
- காப்புறுதி/ விற்பனை துறையில் 10 வருட அனுபவம். சேவைக்காலத்தில் விற்பனைத்துறையில் குறைந்தது 05 வருட நிர்வாக அல்லது மேற்பார்வை அனுபவம்.
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழி அறிவுகளுடன் சிறந்த தலைமைத்துவ ஆற்றல்
- தனிநபர் தொடர்புகளை பேணல்
- 35 இற்கு மேற்படாத வயதெல்லை

### காப்புறுதி உதவிப் பயிலுனர்

(சாவகச்சேரி, சங்கானை, மன்னார், முல்லைத்தீவு)

தேவையான மேலதிக தகைமைகள்:

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி.
- க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கிலம், கணிதம், தமிழ் அல்லது சிங்களத்தில் (02 அமர்வுகளுக்கு மேற்படாத) சிறப்பு சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி
- கணனி அறிவு
- 25 வயதிற்குட்பட்ட வயதெல்லை
- காப்புறுதியில் தகைமையும் சிங்களம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் வேலைபுரியும் ஆற்றல் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு காப்புறுதிதுறையில் பயிற்சி வழங்கப்படும் என்பதுடன் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்வோர் அவர்களின் திறமை மற்றும் பலத்திற்கு அமைய கிளைகளில் சேவைக்கமர்த்தப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வருடாந்த போனஸ், மருத்துவ காப்புறுதி உட்பட மேலும் பல வரப்பிரசாதங்களுடன் கவர்ச்சிகரமான ஊதியம் ஒன்றை பெறுவார்கள்.

பிராந்தியத்திலுள்ள முன்னணி நிதிநிறுவனமாக திகழ வேண்டும் எனும் நிறுவனத்தின் நோக்கத்தினை அடைய தேவையான திறமைகள் உங்களிடம் இருப்பதாக நம்புகின்றோம். உங்களின் சுயவிபரக்கோவையினை உறவினர்கள் அல்லாத நடுவர்கள் இருவரின் பெயர்களை குறிப்பிட்டு இவ்விளம்பரம் பிரசுரமாகி 07 வேலைநாட்களுள் எமக்கு கிடைக்கும் படி அனுப்புங்கள். அல்லது எமது மின்னஞ்சல் முகவரியான jobs@srilankainsurance.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுங்கள்.

உதவிப் பொது முகாமையாளர் - HR
இல. 21, வொக்சோல் வீதி, கொழும்பு 02
தொ.பே: (91-11) 2357457 ∴பக்ஸ் (94-11) 2447742
Web: www.srilankainsurance.com

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று


# செங்கல்பட்டு முகாமிலுள்ள அகதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

தமிழகம் செங்கல்பட்டு நகரில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில் தங்கியுள்ள ஈழத்தமிழர்கள் 22 பேர் நேற்று முன்தினம் காலை உணவு புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்து உள்ளனர்.

இவர்கள் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் சந் தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு எந்த வித வழக்கு விசாரணையும் இன்றி ஒருவருடமாக தமிழக பொலிஸாரினால் இங்கு சிறை வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு நாளொன்றுக்கு 45 ரூபாய் வீதம் 15 நாட்களுக்கு ஒரு முறை ரூபாய் 675 தமிழக அரசால் கொடுக்கப்படுகிறது.இது ஒரு வாரம் செலவுகளுக்கு மட்டுமே இவர்களுக்கு போதுமானதாக இருக்கிறது. மற்ற ஏழு நாட்க ளும் இவர்களை பார்க்க வரும் மக்களிடையே கையேந்தும் நிலையிலேயே உள்ளனர்.

இலங்கையில் இருந்தால் எங்களை போன்ற ஆண்களை கொன்று விடுவார்கள் என்ற அச்சத்தில் எங்கள் வீட்டில் இருப்பவர்கள் தங்களது நகைகளை எல்லாம் விற்று கடும் சிரமத்திற்கிடையில் இங்கு அனுப்பி வைத் தனர்.

ஆனால் எங்களது தாய் தமிழ்நாடு எங்களை கைது செய்து இங்கு வைத்துள்ளது. எங்கள் மீது எந்த வழக்கும் பதியாத நிலையில் சந்தேகத்தின் பேரில் நாங்கள் ஏன் ஒரு வருடமாக இருக்க வேண்டும். எங்களை விடுதலை செய்யாதவரை எங்களின் இந்த உணவு புறக்கணிப்பு போராட்டம் தொடரும் என்று உறுதிபட கூறுகின்றனர்.(ஸ்ரீ-2)

# மகாபோதி தாக்குதலுடன் தொடர்புடைய 7 பேர் கைது

சென்னை எழும்பூர் கெத் லேனில் உள்ள மகாபோதி சங்கத்தின் தாக்குதலுடன் தொடர்புடைய ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 25 ஆம் திகதி மகாபோதியினுள் புகுந்த இனந்தெரியாத நபர்களால் அங்கிருந்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது 5 பேர் காயமடைந்தனர்.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)



மட்டக்களப்பு "வெபர்" மைதானத்தில் கடந்த 22 ஆம் திகதி 21 ஆயிரம் மக்கள் இணைந்து வழங்கிய தேவாரப் பாராயணம் மற்றும் மகாருத்ர பூஜையின் பின்னர் தவத்திரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி மக்கள் மத்தியில் உரையாற்றுதையும், கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கை துறைமுகங்களில் கப்பல்களை திருத்துவதற்கு விசேட பிரிவுகள்

(கொழும்பு)

ஆசியாவின் கொள்கலன் கப்பல் போக்குவரத்து சேவையின் கேந்திர ஸ்தானமாக விளங்கிவரும் இலங்கையின் கப்பல் சேவைகளை வலுவூட்டும் எண்ணத்துடன் அரசாங்கம் மனித வளங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வணிகச் சட்டம் மற்றும் நடைமுறையை அபிவிருத்தி செய்வதற்கான ஸ்தாபனம் இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து கப்பல் போக்குவரத்துச் சட்டம் மற்றும் அதன் நடைமுறை பற்றிய பயிற்சிப் பாசறையை கடந்த 23 ஆம் திகதியன்று கொழும்பில் ஆரம்பித்து வைத்தது.

தெற்காசியப் பிராந்தியத்தில் கப்பல் போக்குவரத்துத் துறையில் முன்னணி நாடாக இலங்கையை மாற்றுவதற்கு இத்தகைய பயிற்சிகள் பேருதவியாக அமையும்.

திருகோணமலை ஒலுவில் அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்களை சர்வதேச தரத்திற்கு வளர்ச்சி அடையச் செய்வதன் மூலம் மாதமொன்றுக்கு இலங்கைத் துறைமுகங்களில் தரித்துச் செல்லும் கொள்கலன் கப்பல்களின் எண்ணிக்கையை 500 ஆக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

உலகிலுள்ள மிகப்பெரிய துறைமுகங்களான ஜேர்மனியின் ஹெம்பர்க் துறைமுகம், ஹொங் கொங் துறைமுகம், சிங்கப்பூர் துறைமுகங்களை போன்று நவீன வசதிகளைக் கொண்ட பாரிய துறைமுகங்கள் போன்று கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இவ்விரு துறைமுகங்களில் பழுதடைந்த கப்பல்களை திருத்துவதற்காக விசேட பிரிவுகளும் ஏற்படுத்தப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளுடன் அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் கப்பல் ?

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றிக் கொண்டு அவுஸ்திரேலியா மற்றும் கனடா நோக்கிச் செல்வதற்காக கப்பல்கள் தயார்ப்படுத்தப்பட்டு வருவதாக நம்பகமான தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது.

இலங்கை மற்றும் இந்தியர்களே அதற்கான ஏற்பாட்டை இணைந்து மேற்கொள்வதாக குறித்த தகவல் வட்டாரங்கள்ளளள மூலம் மேலும் தெரிய வருகின்றது. அதற்கென பயணிகளிடமிருந்து பெருந்தொகைப் பணம் அறவிடப்படுவதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

ஆயினும் தமிழ்நாட்டில் பொலிஸாரின் கெடுபிடி அதிகமாக இருப்பதால் கேரளா அல்லது வேறு மாநிலமொன்றின் கரையோரம் இருந்தே குறித்த கப்பல்கள் புறப்படும் என்றும் நம்பப்படுகின்றது.

போதுமான வசதிகளோ பல நாட்கள் கடல் பயணத்துக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய வலுவான தன்மையோ அற்ற கப்பல்களே அதற்காகத் தயார்படுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பயணிகளை ஆபத்துக்குள்ளாக்கும் நிலையில் இருந்தாலும் அவற்றை ஏற்பாடு செய்திருப்பவர்கள் பணத்தை மட்டுமே குறியாகக் கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இலங்கையிலிருந்து இந்தியா சென்று தங்கியிருக்கும் சிலர் சென்னையிலிருந்து அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக புலனாய்வுப் பிரிவினருக்கும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விசாரணைகளை இந்தியா, இலங்கை மற்றும் கனேடிய உளவுத் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# மின் தடை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5மணிவரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி மானிப்பாய், சங்குவேலி, கோண் டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிர தேசம், யாழ்.பட்டணப்பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டி ருக்கும் எனவும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங் கப்படலாம் என இலங்கை மின்சாரசபை யின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# சட்டவிரோத ஆட்கடத்தல்களை கட்டுப்படுத்த உதவுமாறு மலேசியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உதவிகளை வழங்குமாறு மலேசியாவிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையர்களை மலேசியாவிற்குள் அழைத்துச் செல்லும் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உதவிகள் வழங்கப்பட வேண்டுமென மலேசியாவிற்கான இலங்கைப் பிரதி உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உதய பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியா போன்ற மேற்குலக நாடுகளுக்கு இலங்கையர்களை அனுப்பி வைப்பதற்கான மத்திய நிலையமாக மலேசியாவை சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளுக்கு நபர்களை சட்டவிரோதமாக அனுப்பிவ்வப்பதற்காக 8 ஆயிரம் தொடக்கம் 12ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரையில் அறவீடு செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவிற்கு செல்வதற்காகவே இலங்கையர்கள் 4ஆயிரம் அமெரிக்க டொலர்களை முற்பணமாக செலுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் தொழில்களில் ஈடுபட்டுவரும் இலங்கையர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


# பாடசாலைத் தினமும் பரிசளிப்பு விழாவும்


யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் பாடசாலைத் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வித்தியாசாலை அரங்கில் பாடசாலை அதிபர் கா.சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக் கழக நூலக உதவிப் பதிவாளர் மு. சின்னராசா நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-9)







மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய "மாவடியான் திரு" கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவில் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி ந.றஞ்சனா உரையாற்றுவதனையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் முதல் பிரதியை பேராசிரியர் கந்தசாமி வெளியிட்டு வைப்பதனையும் கலந்துகொண்ட பொதுமக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# பொலிஸாரின் சுற்றிவளைப்பு தேடுதலில் வீதியோரச் சிறுவர்கள் 21 பேர் மீட்பு

(கொழும்பு)

பதுளை மாவட்டத்தில் உள்ள வெலிமட பிரதேசத்தில் ஆதாரிப்பார் எவருமின்றி பாடசாலைகளுக்கு செல்லாமல் வீதிகளில் அலைந்து திரிந்து வந்த 21 சிறுவர்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இச்சிறுவர்கள் வீதியோரங்களில்தான் வசித்து வந்ததுடன் எடுபிடி வேலைகளை செய்து வந்ததாக குறிப்பிடப்படுகிறது.

சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றின் மூலம் பொலிஸாரால் மீட்கப்பட்ட இவர்கள் பதுளையில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இச்சிறுவர்கள் 10 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் இவர்கள் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்ட தாகவும் இவர்களிடம் ஆளடையாளங்களை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எவையும் இல்லை என தெரியவருகிறது.

இவர்களின் ஆரோக்கியம், சுகாதாரம் ஆகியன உறுதிப்படுத்தப்படவேண்டியுள்ளது.

எனவே இவர்கள் விரைவில் வைத்தியர் ஒருவரிடம் அழைத்துச்செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் இவ்வருடத்திற்காக புதிய நிர்வாக உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக இ.கந்தசாமி, செயலாளராக தி.சத்தியதீபன், பொருளாளராக கு.சுரேஸ்குமார், உபதலைவராக இ.பிரதீபன், உபசெயலாளராக க. தயாளன், கணக்காய்வாள ராக வை.துவாரகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பதின்மூன்று சனசமூக நிலையங்கள் அங்கம் பெறும் மேற்படி ஒன்றியத்தில் ஏனைய சனசமூக நிலையத்தில் இருந்து ஒவ்வொரு அங்கத்தவர் வீதம் 13 பேர் நிர்வாக குழுவில் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)


union assurance
Trust in your tomorrow, today.

## வேலைவாய்ப்பு

**Join us as an Insurance Adviser to experience what you hoped for...**

රක්ෂණ උපදේශකයෙකු ලෙස අප හා අත්වැල් බැඳගන්නා ඔබගේ සිහිනයන් නිසැකවම අපි සැබෑ කරන්නෙමු...

உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.




இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

### பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
பதவி-1
பதவி - 2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-

- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திடசித்தம்.

**யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.**

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- செவ்வாய்க்கிழமை - 01.02.2011
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்,
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(அ-1563)

இ.கிருபாகரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே: 0774115290


# 50 இலட்சம் ரூபாவை மோசடி செய்து ஏமாற்றியவர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

தூதரகம் ஒன்றில் மொழி பெயர்ப்பாளராக பணியாற்றிய பெண் ஒருவரிடம் 50 இலட்சம் ரூபா பணத்தை தேவை ஒன்றிற்காக பெற்றுக்கொண்டு அந்தப் பணத்தை மீண்டும் திரும்பிக் கொடுக்காமல் நம்பிக்கை மோசடி செய்த சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட ஆடை தொழிற்சாலை உரிமையாளரை நீர்கொழும்பு பிரதான நீதிவான் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 25 இலட்சம் ரூபா கொண்ட பிணையாளிகள் இருவரின் சரீரப்பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

ஜா எல, ஏக்கல பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இவ்வாறு பிணையில் செல்ல விடுக்கப்பட்டவராவார். பமுனுகம மாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இந்த வழக்கின் முறைப்பாட்டளராவார்.

வழக்கின் முறைப்பாட்டாளருடன் சந்தேக நபர் நட்புடன் பழகி வந்துள்ளதாகவும் அதன் காரணமாக நம்பிக்கையின் பேரில் சந்தேக நபருக்கு 50 இலட்சம் ரூபா பணத்தை முறைப்பாட்டாளர் வழங்கியுள்ளார்.

ஆயினும் சந்தேக நபர் பணத்தை திருப்பிக்கொடுக்காமல் ஏமாற்றியுள்ளதாக வழக்கின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் வெளிநாடு செல்வதற்கு நீதி மன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

(பொலிகண்டி)

யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் வே.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-48)

# மீன்பிடித் தடையால் பாதிக்கப்பட்டுள்ள கரைச்சி வடக்கு பிரதேச மீனவர்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் எட்டு மாதங்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறியுள்ள கரைச்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் மீன்பிடி தடையாலும் போதிய உதவிகள் கிடைக்காமலும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மீள்குடியேறியுள்ள இந்த மக்களின் தொழில் வாய்ப்புக்குத் தேவையான உதவிகள் சரியான முறையில் வழங்கப்பட வில்லை என்று கூறப்படுகிறது.

தடைசெய்யப்பட்ட பகுதிகளில் காணப்படு கின்ற இம் மக்களின் கைவிடப்பட்ட படகுகளைச் சென்று எடுப்பதற்குரிய சரியான நடை முறைகளும் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு பகுதி மீனவர்களுக்கு மாத்திரம் சிறு கடலில் தொழில் செய்வதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கரைச்சி வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் இளையதம்பி கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டையும் பிரதான நிலப் பகுதியையும் பிரிக்கின்ற யாழ். கடலேரியில் ஆனையிறவிலிருந்து கிழக்குப் புறமாக சுண்டிக் குளம் வரையிலான சுமார் 38 கிலோ மீற்றர் நீளமான கடலேரியிலேயே இந்த மீனவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்துவந்தனர்.

ஆனால் இந்தப் பிரதேசத்தில் இன்னும் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப் படவில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே தாம் ஏரிக்குள் சென்று மீன்பிடிப் பதற்கு அனுமதித்திருப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். கடலுடன் ஆனையிறவு கடலேரி கலக்கின்ற சுண்டிக்குளம் முகத்துவாரத்திற்கு அப்பால் உள்ள கடல் பகுதிகளுக்கு இந்த மீனவர்கள் சென்று மீன்பிடிப்ப தென்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார். (ஸ்ரீ-2)

# தீப்பற்றியதில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுச் சுற்றாடலில் உள்ள குப்பையைக் கூட்டி தீ மூட்டும்போது எதிர்பாராத விதமாக புடைவையில் தீப்பற்றிக்கொண்டதில் உடல் முழுவதும் பலத்த எரிகாயங்களுடன் குடும்பப் பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 22 ஆம் திகதி மாலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

உயரப்புலம் பிடாரி கோயில் வீதியைச் சேர்ந்த ரமேஸ் சிவப்பிரியா வயது 35 என்ற குடும்பப்பெண் தனது வீட்டு வளாகக் குப்பைகளைக் கூட்டி மண்ணெண்ணெய் ஊற்றி குப்பைக்குத் தீ மூட்டியதில் எதிர்பாராத விதமாக புடைவையில் தீப்பற்றி உடல்முழுவதும் பரவி பலத்த எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். (ஸ்ரீ-2)

# நூற்றுக்கும் அதிகமான இலங்கையர்கள் சவுதி அரேபியாவில் பட்டினி அவலம்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த சுமார் நூறு பேர் அடங்கிய குழுவொன்று சவுதி அரேபியாவில் பட்டினியை எதிர்கொண்டுள்ள அவலம் குறித்து அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் பராமுகமாக இருப்பதாக சிங்கள ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்ற நூற்றுக்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் கொண்ட குழுவொன்றே அவ்வாறு சவுதி அரேபியாவின் சரதியா என்னுமிடத்திலுள்ள பாலத்தின் கீழ் பட்டினி வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

இளைஞர்கள் , பெண்கள் மட்டுமன்றி கர்ப்பிணித் தாய்மார்களும் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கடந்த நான்கு நாட்களாக அவர்கள் உணவு , நீரின்றி அவதிப் பட்டுக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவர்களைப் பொறுத்தவரை தற்போதைக்கு யாராவது இரக்கப் பட்டு உணவு கொடுத்தாலொழிய உண்பதற்கு எதுவுமில்லாத நிலையில் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர்.

ஆயினும் அவர்களின் நிலை பற்றி கொஞ்சமேனும் கவனம் செலுத்தாத அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அங்கிருப்பவர்களின் கையில் இருந்த பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை மட்டும் சேகரித்துக் கொண்டு சென்றுள்ளதாகவும் மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்குத் திருப்பியனுப்புவதற்கான செலவுக்கு அவை தேவைப் படும் என்பதாக தூதரக அதிகாரிகள் கூறிச் சென்றிருந்த போதிலும் அதன் பின்னர் இன்று வரை தூதரக அதிகாரிகள் யாரும் தங்களைத் திரும்பியும் பார்க்கவில்லை என்பதாக அங்கிருப்பவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். (ஸ்ரீ-2)

# சப்ரகமுவ பல்கலையின் கல்வி நடவடிக்கைகள் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

பகிடிவதை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சப்ரகமுவ பல்கலைக்கழகம் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பகிடிவதையில் ஈடுபட்ட சிரேஷ்ட மாணவர்கள் 58 பேரை கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இடைநிறுத்தினர்.

இதனையடுத்து பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களும் மூடப்பட்டன.

இந்நிலையில் நாளை திங்கட்கிழமை கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மஹிந்த ரூபசிங்க தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# எரிகாயங்களுக்குள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் அடுப்புக்கு எண்ணெய் விடும் போது பற்றி எரிந்ததில் குடும்பப் பெண் ஒருவர் உடல் முழு வதும் எரிகாயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக தெரிய வருவதாவது,


தோப்பு பாடசாலை வீதி அச்சுவேலியைச் சேர்ந்த நிறைவாசன் சுகந்தினி (வயது 23) என்ற குடும்பப் பெண் எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் அடுப்பிற்கு மண்ணெண்ணெய் ஊற்றும் போதே தீப்பற்றியதில் உடல் முழுவதும் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி நல்லூர் நோக்கி நடை பயணம்

(கொழும்பு)

நாட்டில் கடந்த பல வருடங்களாக நிலவிய அசாதாரண நிலைமையை முடிவுக்குக்கொண்டு வந்து நாட்டில் சுமுக நிலைமையை ஏற்படுத்திய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆசிவேண்டி நாவலப்பிட்டி நவதிஸ்பனை சேர்ந்த சிசிர லலித்குமார என்பவர் யாழ். நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தை நோக்கி நடை பயணமொன்றினை கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துள்ளார்.

நாவலப்பிட்டி நவதிஸ்பனை உப அஞ்சல் அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற 27 வயதான இவர் கண்டி, மாத்தளை, அநுராதபுரம் ஊடாக யாழப்பாணத்திற்கு ஒரு வாரத்தில் நடை பயணமாக வந்தடைந்துள்ளார். (ச-5)




கிறகரி கிறிஸ்தோபர் கலாபூஷணம் விருது பெற்றமையை கௌரவித்து குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் கலைத்திலகம் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கேடயம் வழங்குவதையும் அருகில் பங்குத்தந்தை ஆர்.சி.எக்ஸ்.நேசராசா அடிகள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 2011.01 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1648 - எண்பதாண்டுப் போர்: நெதர்லாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உடன்பாடாகியது.

★ 1649 - முதலாம் சார்ள்ஸ் மன்னன் தூக்கிலிடப் பட்டான். அவனது மனைவி ஹென்றியேட்டா மரீயா பிரான்ஸ் சென்றாள்.

★ 1649 - பொதுநலவாய இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1649 - இளவரசர் சார்ள்ஸ் ஸ்டுவேர்ட் இரண்டாம் சார்ள்ஸ் தன்னை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் மன்னனாக அறிவித்தான். எனினும் எவரும் அவனை அங்கீகரிக்கவில்லை.

★ 1820 - எட்வர்ட் பிரான்ஸ்ஃபீல்ட் அண்டார்டிக்காவில் தரையிறங்கினார்.

★ 1835 - ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆண்ட்ரூ ஜாக்சன் கொலை முயற்சியில் இருந்து தப்பித்தார்.

★ 1889 - ஆஸ்திரியாவின் இளவரசர் ருடோல்ஃப் தனது காதலியுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

★ 1930 - உலகின் முதலாவது radiosonde சோவியத் ஒன்றியத்தில் உருவாக்கப்பட்டது.

★ 1933 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதி (Chancellor) பதவியேற்றார்.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: உக்ரேனில் லேத்திச்சிவ் என்ற இடத்தில் யூதர்கள் ஆயிரக்கணக்கில் நாசிகளால் கொல்லப்பட்டனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: பால்ட்டிக் கடலில் வில்ஹெல்ம் கூஸ்ட்லொஃப் என்ற பயணிகள் கப்பல் சோவியத் நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கப்பட்டதில் அதில் பயணம் செய்த 9 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1964 - ரேஞ்சர் 6 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1964 - தென் வியட்நாமில் ஜெனரல் நியுவென் கான் (Nguyen Khanh) இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★ 1972 - வட அயர்லாந்தில் விடுதலைப் போராட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட 14 பேர் ஐக்கிய இராச்சிய துணை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1972 - பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியது.

★ 1976 - தமிழ்நாட்டில் மு.கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஜனாதிபதிஆட்சி கொண்டு வரப்பட்டது.

★ 1994 - பியோத்தர் லேக்கோ சதுரங்க ஆட்டத்தில் உலகின் முதலாவது வயதில் குறைந்த கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

★ 2000 - கென்யாவின் விமானம் ஒன்று அட்லாண்டிக் கடலில் ஐவரி கோஸ்ட் கரையில் வீழ்ந்ததில் 169 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2003 - பெல்ஜியம் சமப்பால் திருமணத்தைச் சட்டபூர்வமாக்கியது.

★ 2006 - தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 5 பேர் மட்டக்களப்பு வெலிக்கந்தையில் கடத்தப்பட்டனர்.

## பிறப்புகள்

★ 1882 - பிராங்கிளின் ரூஸ்வெல்ட், 32ஆவது ஐக்கிய அமெரிக்கக் ஜனாதிபதியாவார். (இ.1945)

★ 1899 - மாக்ஸ் தெய்லர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1972)

★ 1910 - சி.சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி (இ.2000)

★ 1941 - டிக் சேனி, அமெரிக்காவின் 46ஆவது துணை ஜனாதிபதி.

★ 1949 - பீட்டர் ஆகர், நோபல் பரிசு பெற்றவர்.

1974 - கிரிஸ்டியன் பேல், பிரித்தானிய திரைப்பட நடிகர்

## இறப்புகள்

★ 1832 - ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன், கடைசிக் கண்டி அரசன்

★ 1891 - சார்ள்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல் கிளர்ச்சியாளர் (பி.1833)

★ 1928 - ஜொஹான்னஸ் ஃபிபிகர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1867)

★ 1948 - மகாத்மா காந்தி, (பி.1869)

★ 1948 - ஓர்வில் ரைட், ஐக்கிய அமெரிக்காவின் வானூர்தி நிபுணர் (பி.1871)

★ 1969 - Georges Pire, நோபல் பரிசு பெற்றவர் (பி.1910)


★ 1981 - வில்லியம் கோபல்லாவ, இலங்கையின் முதலாவது ஜனாதிபதி (பி.1897)

★ 1991 - ஜோன் பார்டீன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1908)

★ 2007 - சிட்னி ஷெல்டன் அமெரிக்க எழுத்தாளர். (பி.1917)

**1948 - இந்தியத் தலைவர் மகாத்மா காந்தி இந்துத் தீவிரவாதியான நாதுராம் கோட்சேயினால் படுகொலை செய்யப்பட்டார்.**

# “ஈழப்பிரச்சினை ஒரு படைப்பாளியான உங்களை எப்படிப் பாதித்தது?



நாஞ்சில் நாடன்

சக மனிதர்கள் மீதான அக்கறையும் சமூகம் மீதான கோபமுமே நாஞ்சின் நாடனின் எழுத்து என்று கூறப்படுகிறது.

‘தலைகீழ் விகிதங்கள்’, ‘எட்டுத்திக்கும் மதயானை’, ‘என் பிலதனை வெயில் காயும்’ என தமிழில் முக்கிய நாவல்கள் படைத்தவர். ‘சூடியபூ சூடற்க’ சிறுகதை தொகுப்புக்காகச் சாகித்திய அக்கடமி விருதுபெற்றுள்ள நாச்சில் நாடன் இலக்கியம், சினிமா, அரசியல் எனப் பல தளங்களிலும் தன் கருத்துக்களை இங்கு பகிர்ந்து கொள்கிறார்.

**கே: சகித்திய அக்கடமி விருது... மகிழ்ச்சியா?**

இது ஓர் அங்கீகாரம்... அடையாளம் அவ்வளவுதான்.

கேரளாவில் புகழ்பெற்ற எழுத்தாளர் எம்.ரி. வாசுதேவன் நாயருக்கு ஞானபீட விருது கிடைத்தது. அவர் வீட்டுகுப் பாராட்ட வந்து நின்ற கார்களில் கேரள முதல்வர் ஏ.கே.அந்தோனியின் காரும் ஒன்று.

தமிழகத்தில் ஓர் எழுத்தாளருக்கு ஞானபீட விருதே கிடைத்தாலும் முதல்வரிடம் சென்று தான் எழுத் தாளன் வாழ்த்துப்பெற வேண்டும்.

**கே:சினிமா தமிழ் கலாசாரத்துக்கு அபாயமானதா?**

“கலாசாரம் என்பது என்போதும் நிலையானதாக ஒன்று இல்லை. அது மாறிக்கொண்டே இருப்பது ஆனால் *மரபைக் கணக்கில் எடுக்காத கலாசார மாற்றம் பாழ். அற மதிப்பீடுகளும் ஒழுக் கவிழிமியங்களும்தான் ஒரு பண்பாட்டின் வேர்கள்.*

தமிழ் சினிமாதான் தமிழ் சமூகத்தின் சாபக்கேடு. தமிழ் சமூகம் அளவுக்க சினிமாவின் கேடுகளை உள்வாங்கிக் கொண்ட சமூகம் வேறு எதுவும் கிடையாது. அதுபோக அரசியலும் ஊடகமும் கல்வியும் நம் சமூகத்தை நாசம் செய்து கொண்டிருக்கின்றன. கறிக் கோழியை வளர்ப்பதற்கும் குழந்தைகளை வளர்ப்பதற்கும் பெற்றோர்களிடம் எந்த வித்தியாசமும் இருப்பதில்லை.

தொகுப்பு:- ஜெ.கி.ஜெயசீலன்
துணை நூலகர், யாழ்ப்பாணக் கல்லூரி

புறோயிலர் கோழியை வளர்ப்பதைப் போல பிள்ளைகளை வளர்த்தால், அச் சமூகம் எப்படி உருப்படும்? படிப்பு, வேலை இதைத்தவிர மனித வாழ்கைக்கு அர்தங்களே இல்லையா? குறிக்கோளே இல்லையா? நமது சமூகம் எப்படி மதிப்பீடுகளை இழந்து கிடக்கிக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்.

## நாஞ்சில் நாடன் அளித்த செவ்வியிலிருந்து

சில நாட்களுக்கு முன்பு எனக்கு பி.எஸ்.என்.எல்லில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு. எடுத்துப்பேசினால், ‘ஹாய், மச்சான் சௌக்கியமா?’ என்றது. *அது ஒரு பதிவு செய்யப்பட்ட குரல் எதிர்முனையில் இருப்பவர் யார்? எழுத்தாளரா, கொலைகாரரா?, ஆசிரியரா?, நோய்வாய்ப்பட்டவரா? அவருக்கு என்ன வயது இருக்கும் என்று எந்தக் குறைந்தபட்ச அறிவும் இல்லாமல் கூவுகிற வியாபாரக்குரல்கள் என்னை இம்சை செய்கின்றன!*

**கே:ஈழப்பிரச்சினை ஒரு படைப்பாளியானஉங்களை எப்படிப் பாதிதது?**

வெகுவாக! அடுத்து வெளிவர இருக்கிற என்னுடைய *‘பச்சைநாய்கள்’* என்னும் கவிதைத் தொகுப்பில் ஈழம் சார்ந் அரசியல் கவிதைகள் நிறைய இருக்கும்.

நான் ஒரு படைபாளி என்னுடைய மறுப்பை படைப்பாகத்தான் பதிவு செய்ய முடியும் ஆனால் பல படைப் பாளிகள் தங்கள் எதிர்ப்புக் களையும் உணர்வுகளையும் படைப்பாகக் கூட பதிவு செய்யவில்லை என்று தான் நினைக்கிறேன். ஆனால் இந்தத் தலைவர்கள் என்ன செய்தார்கள்? என்னை ஒரு மலையாள எழுத்தாளர் கேட்டார் ‘இவ் வளவு பெரிய இன அழிப்பு நடந்திருக்கிறதே... ஏன், உங்கள் ஊரில் ஒரு முனிசிப்பல் கவுன்சிலர் கூட இராஜினாமா செய்யவில்லை?’ என்று. மௌனத்தில் தவிர, வேறு எந்தப்பதிலும் என்வசம் இல்லை.

ஈழப்பிரச்சினையைப் பொறுத்வரை அலுக்கிட்டிக் கொள்கிறோமே தவிர எல்லாமே, பாசங்கோ என்று தோன்றுகிறது. இன்றைய இளைஞர்களுக்குப் பிரச்சினையே என்னவென்று புரியவில்லை!



# காந்தி காட்டிய பூர்வாதாரக் கல்வியின்வழி இன்றைய முன்பள்ளிக் கல்வியை மேலும் முன்னேற்றுவோம்



1937ஆம் ஆண்டு வர்த நகரத்தில், மார்வாரிக் கல்விச் சங்கம் என்ற நிறுவனம் தனது ‘வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அச்சமயம் ஆகில இந்தியக் கல்வி மகாநாடு ஒன்றையும் கூட்டியது. இம்மகாநாடு ஒக்ரோபர் 22, 23ஆம் திகதிகளில் மகாத்மா காந்தி தலைமையில் நாட்டிற்கேற்ற கல்வி முறையொன்றை நிர்மாணிக்கும் நோக் கில் இடம்பெற்றது.

இம்மகாநாட்டில் காந்தியின் கல்வியியற் கருத்துக்கள் அலசி ஆராயப்பட்டு ஆதாரக் கல்வி எனும் கல்வி முறையாக ஏற்கப்பட்டது. இவ்வாதாரக் கல்வியை, வர்தாக் கல்வி, சேவாச்சிரமக் கல்வி, காந் தீயக் கல்வி, மூலக் கல்வி, அடிப்படைக் கல்வி, புதுக் கல்வி, வேர்க் கல்வி, தொழில் மூலக் கல்வி எனப் பல பெயர் கொண்டு அழைப்பர்.

### ஆதாரக் கல்வியின் நான்கு பருவங்கள்

காந்தி அடிகளின் கருத்துப்படி ஆதாரக் கல்வியானது குழந்தை பிறந்தது முதல் மரணப்படுக்கைவரை பயில வேண்டிய கல்வி ஆகும். மனித வாழக்கையில் பல பருவங்கள் இருப்பது போல் கல்வியிலும் பல பருவங்கள் இருப்பதாக அவர் கூறுகிறார்.

இவை முறையே பூர்வாதாரக் கல்வி, ஆதாரக் கல்வி, பின் ஆதாரக் கல்வி, வயது வந்தோர் கல்வி என நான்கு வகைகளில் அமையும்.

### பூர்வாதாரக் கல்வி

பூர்வாதாரக் கல்வி என்பது குழந்தைகளுக்கு ஏழு வயதாகும் வரையில் அப் பிள்ளைக்கு அமைய வேண்டிய நல்ல பழக்கவழக்கங்கள் அமையச் செய்தல் , சுகாதார வாழ்க்கை, தன்னம்பிக்கை, பெரியோர்களிடத்தும் மற்றவர்களிடத்தும் மரியாதையுடன் பழகுதல் போன்ற நல்ல குணங்களை வளர்ப்பதாகும்.

இங்கு ஒவ்வொரு பிள்ளையினதும் ஆளுமையை வளர்ப்பதுடன் சமூகப் பயிற்சியை வழங்குவதே இதன் நோக்கமாகக் கருதப்படுகிறது.

### பூர்வதாரக் கல்வியின் நோக்கம்

பூர்வாதாரக் கல்விக்குட்படும் மாணவர் வயதெல்லை இரண்டரை வயது முதல் ஏழு வயது வரை இருக்கலாம் எனக் காந்தி கருதினார். இக் காலத்தில் இவர்களை எல்லாத் துறைகளிலும் ஒருங்கே வளர்ச்சியேற்பட வழிசெய்தல் வேண்டும். இளம்பருவத்தில் குழந்தையிடம் படிகின்ற பழக்க வழக்கங்களும் மனப்பான்மையும் சமூகத்தில் நல்ல எதிர்கால வளர்ச்சியையும் போக்கையும் உருவாக்கும்.

### பூர்வாதாரக் கல்வியும் முதியோர் கல்வியும்

பாலர் கல்வியும் வயது வந்தோர் கல்வியும் ஒன்றையொன்று சார்ந்திருப்ப தாகவே உள்ளது. குழந்தையின் வீட்டு வாழ்க்கை கல்விக்கு முக்கிய அம்சமாதலால் குழந்தை வளர்ப்பில் பராமரிப்பு, கல்விப் போதனை என்பவற்றிலும் பெற்றோர் போதிய அறிவு பெறுவது அவசியம்.

### பூர்வாதாரப் பாடசாலையின் அமைப்பு

ஆதாரக் கல்வி நடைபெறும் பாடசாலையுடன் இணைந்து இப்பாடசாலை அமைதல் சிறந்ததாகும். திறந்த இடத்தில் நல்ல காற்றோட்ட வசதியுள்ளதாக, நிழல் தரும் மரங்களால் அணி செய்யப்பட்டதாக பாடசாலை இருத்தல் வேண்டும். ஊரின் நடுவே பாடசாலை இருப்பதோடு இடம் எளிமையானதாகவும், குழந்தையின் கற்பனைத் திறனுக்குத் தீனி போடக்கூடியதாகவும் அமைபெறுதல் வேண்டுமெனக் காந்தியடிகள் அன்று கூறினார்.

### பாடசாலை நிர்வாகம்

தகுதிவாய்ந்த கிராமத்தவர், அல்லது தன்னார்வத் தொண்டுப்பணி நிறுவனக்கள் பாடசாலையை நடத்தலாம் என்றும் பாடசாலை வாழ்க்கையானது ஏறத்தாழ குடும்ப வாழ்க்கையைப்போல் இருக்கவேண்டுமெனவும் குறிப்பிடுவதோடு, ஒரு ஆசிரியரின் பொறுப்பில் இருபது வரையான குழந்தைகள் இருக்கலாம் என்றும் குழந்தைக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இவற்றை உள்ளூர் நிலைமைகளிலேயே செய்துகொள்ளக்கூடியதாக இருக்க வேண்டுமென்றும் கூறுகின்றார்.

திருமதி அ.நிருபா
ஆசிரியர்
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

பாடசாலைகளில் ஒருவேளை உணவை அளிக்க முயற்சிக்க வேண்டு மென்றும் பால் தருவது முக்கியமென்றும், பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பேண ஒரு வைத்தியர் அவ்வப்போது கவனித்தல் அவசியம் எனவும் குறிப்பிடுகிறார். பாடசாலைகளின் சமூக வேலைகள் அனைத்தையும் ஆசிரியரும் பிள்ளைகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார்.

இன்று எமது கிராமப்புற முன்பள்ளிகளில் இம்முறைகளைக் கருத்திற் கொண்டு செயற்பட்டாலும் அவை நிறைவு அளிப்பதாகவில்லை. இவ்விடயத்துடன் தொடர்புடைய பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள், அமைப்புக்கள் மேலும் அக்கறை எடுக்கும்பட்சத்தில் நாமும் எதிர்காலத்தில் நற்பிரஜை களை உருவாக்க முடியுமல்லவா?

**இன்று (30.01.2011) காந்தி ஜெயந்தி தினம்**

### பூர்வாதாரக் கல்விப் பாடத் திட்டம்

பூர்வாதாரக் கல்விப் பாடத்திட்டத்திலே கீழ்வரும் பதினான்கு விடயங்களில் அதிக முக்கியத்துவம் கொடுத்து கல்வியூட்டப்படல் வேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது.

01. <u>தாய்மொழி</u>: தெளிவான உச்சரிப்பு, எண்ணத்தைத் தெளிவாக வெளியிடும் திறன், சொல்வளப் பெருக்கம் என்பன அமைதல் வேண்டும். இதற்குக் கருவி யாகப் பாட்டு, கதை, நாடகம் என்பவற் றைப் பயன்படுத்தலாம். எழுத்தும், வாசிப்பும் இப்பருவத்திற்குத் தேவையற்றவை.

02. <u>கணிதம்</u>: எண்ணறிவு, சாதாரண மனக்கணக்கு, வட்டம், சதுரம் போன்ற வடிவங்களின் வேறுபாடு தூரம், நிறை, கனவளவு போன்றன பற்றிய பொது வான உணர்ச்சி போதுமானது. தனியாகக் கணிதபாடம் கற்பித்தல் அவசியமற்றது.

03. <u>விஞ்ஞான அறிவு</u>: சூழ்நிலையைக் கூர்ந்துநோக்கி அறிதல், சில எளிய சோதிப்பு மூலம் பொருட்களை இனங்காணல் ஆகிய பண்புகளை வளர்ப்பதாக இருத்தல் வேண்டும்.

04. <u>சுயமுயற்சி</u>: பல்துலக்கல், தலை வாருதல், துணி துவைத்தல், குளித்தல், ஆடையணிதல் போன்ற தன்முயற்சிக ளில் ஈடுபடுவதற்கு வகை செய்வதாக இருத்தல்.

05. <u>சமூகப் பயிற்சி</u>: பகிர்ந்துண்ணல், விளையாட்டு, தன்னையொத்த வயதினரோடும், பெரியவர்களோடும் பழகுதல் போன்ற முயற்சிகளில் திறனை வளர்த்தல்.

06. <u>உழைப்பு</u>: குழந்தையின் கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரிபவை குழந்தை சந்தோசமாகச் செய்யும் வேலைகளாகும். சமையல், துப்பரவாக்கல் போன்ற வீட்டு வேலை, தோட்டவேலை, நூல் நூற்றல், ஓலை முடிதல் போன்ற எளிமையான வேலைகளின்பால் பிள்ளைகளின் ஆர்வம் இருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

07. <u>உடல் வளர்ச்சி</u>: தகுந்த போசனை நுகர்வு, ஏற்ற குடிநீர் பெறல், சுத்தம் என்பனவற்றில் கூடிய கவனம் செலுத்து வதாக இருத்தல் வேண்டும்.

08. <u>வைத்திய வசதி</u>: பல்வேறு தொற்றுநோய், தொற்றாநோய் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். ஆசிரியர் இன் நோய்களைத் தடுத்தல், வருமுன் காப்புப் போன்றவற்றைப் பற்றி அறிந்து இவற்றைக் கைக்கொள்பவராக இருத்தல் வேண்டும்.

09. <u>சுகாதாரம்</u>: உடல், உடை, உணவு, சூழல், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றில் சுத்தம் பேணலைக் கைக் கொள்ள வகைசெய்வதாக இருத்தல் வேண்டும்.

10. <u>சித்திரம்</u>: மனம் போனபடி சித்திரம் வரையலாம், இது பிள்ளையின் ஞாபக சக்தியையும் கூர்ந்துநோக்கும் திறனையும் அதிகமாக்குகின்றது.

11. <u>சங்கீதம்</u>: பாடுவதால் பிள்ளையின் இன்பம் பெருகுகின்றது. இங்கு தாளக் கட்டு முக்கியமானது. தாளத்தோடு பொருந்திய கும்மி, கோலாட்டம், நடிப்பு என்பனவற்றையும் மேற்கொள்ளலாம்.

12. <u>பிராணி வளர்ப்பு</u>: கிராமத்தில் பசு, எருமை, ஆடு, கோழி முதலியவற்றை வளர்த்துப் பராமரித்துவரும் குடும்பம் சார்ந்த பிள்ளைகட்குப் பாடசாலையில் நாய், கிளி, பூனை முதலிய பிராணிகளை வளர்த்தல் அவசியமற்ற செயலாகும். அவ்வாறு இல்லாதவிடத்து, பிராணி வளர்ப்பில் ஆர்வம் ஏற்படுத்தல் தகுந்த தாகும்.


13. <u>விளையாட்டு</u>: விளையாட்டு, வேலை, கல்வி என்பன ஒன்றாக இணைந்திருக்கும் போது மாணவர்களின் ஆர்வம் பன்மடங்காக அதிகரிக்கும்.

14. <u>ஆன்ம வளர்ச்சி</u>: பிள்ளையிடம் அன்பு, பக்தி, மரியாதை, ஒழுங்கு, ஒத்துழைப்பு ஆகிய பண்புகளைப் பாடசாலை வளர்ப்பதாக அமைதல் வேண்டும்.

எனவே காந்தியின் பூர்வாதாரக் கல்வி அணுகுமுறையை முற்றிலுமா கக் கருத்திற்கொண்டு முழு அக்கறை யுடன் செயற்பட்டு எமதுசிறார்களைச்சமூகத்திற்கு இயைபான நற்பிரஜைகளாக்குவோம்.

# எகிப்தில் வலுவடைந்து வரும் போராட்டம்; வன்முறைகளில் பொலிஸார் உட்பட எழுவர் பலி

## ஐ.நா. வின் முன்னாள் அதிகாரி வீட்டுக்காவலில் சிறைவைப்பு



(கெய்ரோ)

எகிப்தில் அந்நாட்டு ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குக்கு எதிரான போராட்டம் வலுவடைந்து வருகிறது.

தலைநகர் கெய்ரோவில் பல இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் தொடர்ந்து வீசப்பட்டன. பலரை பொலிஸார் தடியால் அடித்து விரட்டினர்.

மசூதியில் இருந்து தொழுகை முடிந்து வந்த பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர். இதனால் மசூதி யின் வெளிப்பகுதி போர்க்களமாக மாறியது. கெய்ரோவின் மையப் பகுதியை நோக்கி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர். ஜனாதிபதிக்கு எதிராக கோஷம் எழுப்பியபடி ஊர்வலமாகச் சென்றனர். அப்போதும் வன்முறை ஏற்பட்டது.

நான்காவது நாளை எட்டியுள்ள போராட்டத்தால் அங்கு உள்நாட்டுக் குழப்பம் அதிகரித்துள்ளது. வன்முறைகளில் பொலிஸார் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் புதிய திருப்பமாக நாட்டின் பிரதான எதிர்க்கட்சியும் தடை செய்யப்பட்ட இயக்கமுமான முஸ்லிம் சகோதரத்துவ கட்சி மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவளிப்பதாக நேற்று முன்தினம் அறிவித்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அக்கட்சித் தலைவர் இஸ்லாம் அல் அர்யன் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் நோபல் பரிசு பெற்றவரும் ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி முகாமையின் முன்னாள் தலைவரும் எகிப்தின் எதிர்க்கட்சி தலைவருமான முகமது எல்பரேடியும் போராட்டத்தில் குதிக்கப் போவதாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். கெய்ரோ மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் அவர் தொழுகை நடத்தினார். ஆனால் அங்கிருந்து வெளியேற அவருக்கு தடை விதிக்கப்பட்டது.

இது குறித்து அவர் பேசுகையில்,

எகிப்து வரலாற்றில் இது ஒரு சிக்கலான கட்டம். அரசை வெளியேற்றி மாற்றத்தைக் கொண்டுவர மக்கள் இணைந்துள்ளனர். நாடு வன்முறையில் சிக்குவதை எந்த ஒரு எகிப்தியனும் விரும்பவில்லை. முபாரக் 30 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்துள்ளார். இப்போது அவர் ஓய்வு பெறும் நேரம் வந்து விட்டது என்றார்.

தொடர்ந்து தாரிர் சதுக்கம், தலைநகர் கெய்ரோ உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் பாதுகாப்புக் கருதி இராணுவ வீரர்களும் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். கெய்ரோவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. பொலிஸார் மீது கல்வீச்சு நடந்தது. கூட்டத்தை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியதோடு தண்ணீரையும் பீய்ச்சி அடித்தனர்.

கடற்கரை நகரங்களான சூயஸ் மற்றும் அலெக்சாண்டிரியாவிலும் பெருமளவில் மக்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அதேபோல் சினாய் தீபகற்பத்தின் மின்யா, அசூய்ட், அல் ஆரிஷ் நகரங்களிலும் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கலவரம் வெடித்தது.

மொகந்திசீன் மாவட்டத்தில் இருந்து 10 ஆயிரம்பேர் கொண்ட பேரணி ஒன்று தலைநகர் கெய்ரோவை நோக்கி நேற்று முன்தினம் புறப்பட்டது. ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிரான கோஷங்கள் பேரணியில் எதிரொலித்தன. இந்தப் போராட்டங்கள் அனைத்திலும் இளைஞர்கள் தான் அதிகளவில் பங்குபெற்றனர்.

போராட்டத்தை ஒடுக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. போராட்டத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரும்படி எதிர்க்கட்சிகள் மற்றும் மக்களுக்கு ஜனாதிபதி முபாரக் ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகள் வெளிவரும் போராட்டங்கள் தான் இவை. ஜனாதிபதி முபாரக் உடனடியாக சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். இருதரப்பும் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)






ருவாண்டா நாட்டில் அரசுக்கு எதிராக ஜனநாயக விடுதலை படை எனும் புரட்சிப் படை மூலம் நாட்டில் கலவரம் ஏற்படுத்தியதாக பிரான்ஸ் நாட்டில் கைதுசெய்யப்பட்ட காலிஸ்டி மாபாருஸ்வானா (நடுவில் கண்ணாடி அணிந்திருப்பவர்) நெதர்லாந்தின் தலைநகர் ஹோக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றில் வழக்கு விசாரணைக்காக ஆஜரானார்.

# எகிப்து பிரமிட்டுகளை ஆய்வுசெய்ய முயற்சி

(பாரிஸ்)

எகிப்தில் பழைமை வாய்ந்த பிரமிட்டுகளை கட்டிய விதம் குறித்து ஆய்வுசெய்ய பிரான்ஸ் கட்டடக் கலை நிபுணர் ஒருவர் முயன்று வருகிறார்.

உலக வரலாற்றில் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தும் அளவிற்கு மிகப் பிரமாண்டமான பிரமிட்டுகள் எகிப்தில் உள்ளன. சுமார் 4 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அந்த பிரமிட்டுகள் எப்படி கட்டப்பட்டன என்பதை பல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தும் இதுவரை அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கடந்த 2007ஆம் ஆண்டு ஜான் பியரி ஹாடின் என்பவர் பிரமிட்டு கட்டுவித்த விதம் குறித்து ஆராய அனுமதி கேட்டார். இந்நிலையில் பிரமிட்டு எப்படி கட்டப்பட்டதன் மர்மத்தை அறியும் வகையில் பிரான்ஸ் கட்டடக் கலை நிபுணர் பார் பிரையர் அதற்கான முயற்சியில் தற்போது இறங்கியுள்ளார். (ஸ்ரீ)

# மண்டேலா வீடு திரும்பினார்



(ஜோகன்ஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கடந்த புதன் கிழமை சுவாசக்கோளாறு காரணமாக ஜோகன்ஸ்பேர்க்கில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பார்க்க அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் தவிர வேறு யாரையும் டாக்டர்கள் அனுமதிக்கவில்லை. தீவிர கண்காணிப்பில் அவர் வைக்கப்பட்டிருந்தார். கடந்த 2 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த அவரது உடல் நிலை சீரானது. இதைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

மருத்துவ சிகிச்சை நிபுணர் விஜயானந்த் ராம்லகான் இது குறித்து கூறுகையில், 92 வயதான நெல்சன் மண்டேலா வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது உடல்நிலை சீராக உள்ளது. பீதி அடைய வேண்டிய நிலை ஏதும் இல்லை. இதனால் அவர் தொடர்ந்து தங்கி சிகிச்சை பெற வேண்டிய நிலை இல்லை. ஆனாலும் அவர் வீட்டில் இருந்து தொடர்ந்து சிகிச்சை பெறுவார். அவரது உடல் நிலை கண்காணிக்கப்படும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)



இந்தோனேசியாவில் இருந்து புறப்பட்ட பயணிகள் கப்பலொன்று பான்டென் மாகாணத்தில் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே தீப்பிடித்தது. இதில் 11 பேர் பலியாகினர். விபத்தில் உயிர்பிழைத்த குழந்தையினை மீட்புப் பணியாளர் ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதை படத்தில் காணலாம்.

# நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே அநேகமான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் போது இந்தத் தவறுகள் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.

கூட்டமைப்பின் பெயர் மொழி பெயர்க்கப்பட்டுள்ள முறைமையை ஏற்றுக்கொள்ளமுடியாது என தெரிவித்தே வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதன் மூலம் நியாயம் கிடைக்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் முற்பகுதியில் இது தொடர்பான மேன்முறையீடுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உத்தேசித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து வேட்பாளர்கள் மற்றும் அமைப்பாளர்களுக்கு தேர்தல் சட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றை நடத்தும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

425 பொலிஸ் நிலையங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பிலான செயலமர்வுகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்களுக்கு தேர்தல் சட்டங்கள் குறித்து விளக்கமளிப்பது தொடர்பாக பிரதேசத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தேர்தல் வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு தயார்

## பொலிஸார் அறிவிப்பு

தேர்தல் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்குத் தாம் தயார் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தலைமையிலான விசேட குழுவொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென பொலிஸாரும் தொழிலாளர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். சட்டவிரோத பிரசாரங்களை அகற்றுவதற்கு தொழிலாளர்களைப் பயன்படுத்த பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தேர்தல்களை கண்காணிப்பதற்கு விசேட பிரிவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக் கொடி தெரிவித்துள்ளார். தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# மட்டக்களப்பு மக்களின் இயல்பு நிலையை கட்டியெழுப்ப உலகவங்கி அவசர உதவி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களின் இயல்பு நிலையை முன்னெடுப்பதற்கு உதவிகளை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வேண்டுகோளிற்கமைய இவ் அவசர உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய, மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு உலக வங்கி உதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

இது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்டத்திற்கு விஜயம் செய்த உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடியது.

மாவட்டத்தில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசரப் பணிகள் குறித்து மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது விளக்கமளித்துள்ளார்.

இச் சந்திப்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலர் கலந்து கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# தேசிய அருங்காட்சியகத்தை வெள்ளிதோறும் மூடக் கோரிக்கை

(கொழும்பு)

தேசிய அருங்காட்சியகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மூடப்படவேண்டுமென சேர் ராசீக் பரீட் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சேர் ராசீக் பரீட் அமைப்பின் செயலாளர் எம்.எஸ்.எம். மர்சூக், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தேசிய அருங்காட்சியகத்தின் நிறுவுனர் வாபிச்சை மரிக்காரை கௌரவிக்கும் விதமாக குறித்த நாளில் அருங்காட்சியகம் மூடப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். வாபிச்சை மரிக்கார், சேர் ராசீக் பரீடின் பாட்டனார் என்பது குறிப்பிடத்தக்கது.

மரிக்காரின் கோரிக்கைக்கு அமைய ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் தேசிய அருங்காட்சியகம் வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அநுராதபுர சிறைச்சாலையில் இரு கைதிகள் தப்பியோட்டம்

அநுராதபுர சிறைச்சாலையைச் சேர்ந்த இரண்டு கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை குறித்த சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கைதிகளைக் கண்டுபிடிப்பதற்காக பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் ஈடுபடுத்தபட்டுள்ளனர். அநுராதபுர சிறைச்சாலையில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட கலகத்தை தொடர்ந்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும், இவ்வாறான ஓர் பின்னணியில் கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# காலி -மாத்தறை அதிவேக புகையிரத சேவை அடுத்த மாதம் ஆரம்பம்

காலி- மாத்தறை அதிவேக புகையிரத சேவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளதுடன் எதிர்வரும் முதலாம் திகதி புகையிரதப் பாதையானது புகையிரதத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இப்புதிய சேவையில் ஈடுபடுவதற்காக இந்தியாவில் இருந்து 3 புதிய அதிசக்தி புகையிரத எஞ்சின்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலி-மாத்தறை இடையிலான புகையிரதப் பாதை நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. நிர்மாணப்பணிகளைமுன்னெடுக்கும் இந்திய கம்பனி எதிர்வரும் முதலாம் திகதி புகையிரத பாதையை புகையிரதத் திணைக்களத்துக்கு கையளிக்கவுள்ளதாக புகையிரத அத்தியட்சகர் நாளக பண்டார தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் ஒரு வார காலம் புகையிரதம் பரீட்சார்த்த ஓட்டத்தில் விடப்பட உள்ளது.அத்துடன்சமிக்ஞை விளக்குகள், வீதி கடவைகள் மீளமைக்கும் பணிகளும் இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப் படும். (ஸ்ரீ-2)


# TENDER NOTICE FOR

**PILOT PROJECT OF CONSTRUCTION OF AUCTION HALLS FOR PROMOTING ACTIVITIES OF FISHERMEN'S COOPERATIVE SOCIETIES IN JAFFNA DISTRICT UNDER THE PROJECT FOR DEVELOPMENT PLANNING FOR THE RAPID PROMOTION OF RECONSTRUCTION AND DEVELOPMENT IN JAFFNA DISTRICT (PDP –JAFFNA)**

The Project for Development Planning for the Rapid Promotion of Reconstruction and Development in Jaffna District ( PDP Jaffna) Under Japan International Cooperation Agency (JICA) calls for proposals of the following work and activities.

The works and activities consist of Construction of fish Auction Halls and other Facilities, and Provision of Technical Trainings for five (5) Fishermen's Cooperative Socities (FCSs) composed of Katkovalam FCS, Mandaitivu St. pethuru FCS, Pungudutivu Centre St. Saveriyar FCS, Kachchai FCS, Maravanpulo FCS.

Tender is open to non -governmental organizations (NGOs), firms and/or voluntarily formed consortiums of NGOs and building construction firms from Democratic Socialist Republic of Sri Lanka.

The applicants shall be required:

a) To be Sri Lankan organizations who are registered to ICTAD in building construction. A consortium of a NGO and a building construction firm is acceptable. In case that the NGO and the construction firm may form the consortium to apply the tender, It is advisable that the NGO takes the prime position to another for the consortium.

b) To have done atleast three projects for building construction works (including subcontracted works) with the contract price no lessthan fifteen (15) millon Sri Lankan Rupees during the last five years.

c) To have experience atleast three projects for provision of technical tranings to local communities implemented by the applicant during the last five years.

d) To declare any history of litigation or arbitration resulting from contracts executed in the last five years or currently under execution.

e) To declare successful experiences of foreign funded projects during the last five years.

f) To declare successful experiences of civil works and provision of technical training in the Northern and/ or Eastern Provinces during the last ten years.

Eligible applicants may obtain the Tender Document at:

**Date and Time: from 10:00 hrs to 15:00 hrs on 31st January, 1st ,2nd and 3rd February, 2011.**
**Place: PDP- Jaffna Office, 3rd Floor, Registrar's office Building, District Secretariat, Jaffna, Sri Lanka.**
**Tel/ Fax: 021 -320-7581/021-222-1801,**
**Contact person: Dr Tokio Kitamado**

Question and answer session: from 15:00 hrs to 16:00 hrs on 3rd February, 2011 at PDP Jaffna Office mentioned above.

Both technical and price proposals must be received in separate sealed envelopes and delivered by hand, courier or registered mail to PDP Jaffna Office no later than 16:00 hrs on 11th February 2011.

(3588)

# கவிதைக் கலசம்

## இமயம் தொட...



உன் உள்ளத்தில் நீ
எதை விதைக்கிறாயோ
அதை அறுவடை செய்வதையே
இலட்சியமாக கொள்
மனதை வலிமையாக்கி
கைகளை ஆயுதமாக்கு
முட்டைக்குள் இருக்கும் குஞ்சு
ஓட்டைக் கொத்தித்தான்
வெளிவருகிறது

மாவை. நா. கஜேந்திரா

## சங்குநாதம்

### காலனே!

உனக்கு மட்டும்
தான்– நான்
என்று தெரிந்தும் கூட
ஏன் என்னை நீ
அடிக்கடி வந்து
எட்டிப் பார்த்துவிட்டு
போகிறாய்...!
நீ அழைக்கும் போது
நானே உன்னிடம்
வருவேன்
அதுவரை கொஞ்சம்
பொறுத்துக் கொள்
கால தேவனே!

எஸ்.விபுஷா
கொடிகாமம்.



### இரவே போய்விடு

இரவே...
நீ இனம்புரியாத
இம்சைக்குள்
இன்னும் ஏன்
ஒளிந்து கொண்டிருக்கின்றாய்..?
எத்தனை முகங்கள் முகவரிகள்
உன் முற்றுகைக்குள்
தொலைந்து போயின...
முகத்திரையை
கிழித்து... நீ
வெளியே... வா
ஆடை மாற்றிக் கொள்வோம்
புதிய இயல்பு நிலைக்குள்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### வலிகள்

வலிகளை வார்த்தைகளால்
வடிக்கும் போது
பேனா கூட கசிந்துருகி
கண்ணீர் வடிக்கிறது
இன்னொரு இம்சைகளை
இனியும் வடிக்க முடியாதென்று

பா.கங்கா
வண்ணார்பண்ணை

### கவிதைத் துளிகள்

**உலகம்**
உயிர்கள் தங்கிப் போகும்
இலவச விடுதி

**நித்திரை**
இரவில் நிகழும்
ஒரு சிறிய மரணம்

**காதல்**
இரு இதயங்களின்
இடம் பெயர்வு

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### ஏதாவது இருக்காதா

வாசலோரம் கடந்து
நீயே போன பின்பும் கூட
வாயிலோரம் நடந்து
நான் தேடுகிறேன் என்னை
நீ பதித்த சுவடுகளில்
என் ஞாபகங்கள் ஏதும்
இருக்கிறதா என்று...!

பா.பொன்நிலவன்
மீசாலை

### நினைவு

நினைப்பதற்கு பல நினைவுகள்
இருந்த போதும்
உன் நினைவை விட
இனிமையான நினைவுகள்
எதுவும் இல்லை

உன் நினைவுப் பரிசு எதற்கு?
உன்நினைவே பரிசு எனக்கு

உடன் கண்ட காதல்
என்றும் நிலைப்பதில்லை
உயிர் கொண்டகாதல்
என்றும் இறப்பதில்லை

உன்னை மறக்க வேண்டும்
என்றே நினைக்கிறேன்
என் நினைவே
நீ தான்
என்பதை அறியாமல்


அ.புவி
முல்லைத்தீவு

### உயிராய்

என் உயிர் மேலான உயிரே!
நீயோ எனை உயிருக்கு உயிராய் நேசித்தாய்!
நானோ மனதுக்கு மனமாய் நேசித்தேன்!
ஆனால் இன்று உன்னை நினைத்து!
பதறுகிறேன் பாவி நான்!
நீயோ கோமா நிலையிலிருக்க
பயமாய் இருக்குதம்மா
நானோ உனை நினைத்து நினைத்து
மனதாலே பாதித்தேன்!
நீ உயிர் பிழைப்பாய்
நானே சுகமடைவேன் மறுபடியும் காதலித்து
மகிழ்வோடு வாழ்வோம்

மு.அருமைச்சந்திரன்
வரணி வடக்கு

## மௌனத்தின் தேடல் – 55



### நம்பிக்கை

முட்டி மோதி வீழ்ந்தும்
கொல்ல வரும்
காளையுடன்
மோதுகின்றான்
வெல்வான் என்ற
நம்பிக்கையுடன்
இந்த இளைஞன்

கே.மயூரி
மீசாலை

### தன்னம்பிக்கை

இருள் சூழ்ந்த எம்வாழ்வின்
சவால்களை தளராத
துணிவுடன் போராடி
வென்றெடுத்து ஒளியினை
ஏற்றிடுவாய்

மி.சோபனா
விசுவமடு

### நண்பனே!

அடங்காத காளையை
அடக்க நினைக்கிறாய்
அடக்கி அடிபணிய
வைத்துவிடு...!
அடாவடி செய்யும்
அட்டூழியக்காரர்கள்
அத்தனையும் – உன்
காலடிக்கு வருவர்...!

து.திலக்
யாழ்ப்பாணம்

### தோல்வி

மனிதமோடு போட்டிபோட
முடியவில்லை! பாவம்!
மிருகத்தோடு போட்டியா?
மோதட்டும்! தோற்றுப்போவான்

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

### புரிந்துகொள்

நீ காளையை
அடக்கிக் கொள்வது
உன் வீரத்தை நிலைநாட்ட
அது மிரண்டு கொள்வது
தன்னைப் பாதுகாக்க
உணர்ந்து கொள் மானிடா

செ.வினுஷா
யா/வட்டு இந்து கல்லூரி

### பலம்

காளையை விட்டுவிடு
அதை அடக்காதே!
அவன் பலசாலி
நல்ல வேலைக்காரனும்
உன் காளைக் குணத்தை
அடக்குவாயே!

சகா
மானிப்பாய்

### நெஞ்சத்துணிவு

அங்கத்தில் குறையிருந்தாலும்
அஞ்சாது கொம்பை பிடித்து
அடக்கிட நெஞ்சத்தில்
துணிவிருந்தால் போதுமே

பொ.புனிதன்
வரியப்புலம்

### வீர விளையாட்டு

காளை அடக்கும் வீரனே
வெற்றிக் கொடியேற்றட்டும்
காலனும் காலடியில் வரலாம்
கணித்தே விளையாடு

எஸ்.கே.நிலா
வடமராட்சி

### வீரம்

தோழா வீரத்தை மெச்சுகிறேன்
கொம்புகளில் உன் கரம்
கைகளில் இருக்கிறது உரம்
உரமாய் உன்னிடம் வீரம்
ஆனால் தவறினால் போகும் சிரம்

பொ.கிருசாந்
சங்கானை

### விவேகத்துடன்

வீரமிக்க இளைஞனுக்கு
பாராட்டு
இருப்பினும் நீ
அடக்கவேண்டியது
காளையை அல்ல
உன் தலை கொய்ய
கணம் பார்க்கும்
பகைவர்களை

சு.பிரதீப்

### வேண்டுகோள்

காளை அடக்கும்
கலாசாரம் காப்பவனே!
இன்னலுறும் தமிழ்மக்களின்
இயத்தின் வேதனைகளையும்
களைந்தே காப்பாற்றிடாயோ?

தங்கத்தமிழன்
காரைநகர்

### துணிவு

துள்ளிவரும் காளையை
துணிவோடு தனித்து நின்று
மடக்கிப்பிடித்து அடக்கத்
துடிக்கும் கட்டிளங்காளை
இவன் வீரச் செயல்
வெற்றியின் சிகரமன்றோ!

துரை
மட்டுவில்

### காத்திரு

தன்மான வீரத்தமிழா
எதுக்கு காளையிடம்
சந்தர்ப்பம் வரும் காத்திரு
அப்போது காட்டு உன் வீரத்தை

தர்சிகரன்
நீர்வேலி

### வீரத்தமிழனே

தளராத துணிவோடு
காளையுடன் போராடும்
வீரத்தமிழனே– உன்
கண்ணில் தெரியுதடா
எம் தேசத்தில் – நீ
கொண்டுள்ள வீரத்தாகம்

சு.பிரியங்கா

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 56



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 04.02.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மன்னார் கடற்படுகையில் எண்ணெய் அகழ்வு ஆய்வு பணிகள் திட்டமிட்டவாறே

## பெற்றோலிய வள பணிப்பாளர் தெரிவிப்பு





மன்னார் கடற்படுகையில் தொடர்ந்தும் எண்ணெய் அகழ்வு தொடர்புடைய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், மன்னார் கடற்படுகையில் இந்த எண்ணெய் ஆய்வுகளை நடத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியடைந்துவிடும். அதன் பின்னர் அங்கு உட்கட்டமைப்பு பணிகளை நிறைவேற்றி வைத்ததும் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி எண்ணெய் அகழ்வு ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும் என பெற்றோலிய வள அபிவிருத்தி செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நீல் டி சில்வா தெரிவித்தார்.

இந்தக் கேள்விப் பத்திரங்களை பரிசீலனை செய்து அதில் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் சந்தைப்படுத்தல் ஆலோசகர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மன்னார் கடற்படுகையின் பல்வேறு பகுதிகளில் எண்ணெய் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பல்வேறு நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்படவுள்ளது.

ஜனவரி மாத முடிவில் கேள்விப் பத்திரங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக பிரதான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும்.

கெயின்ஸ் லங்கா நிறுவனம் இன்று எண்ணெய் அகழ்வு ஆய்வுப்



பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களையும், சேவைகளையும் வழங்கி பணிகளை துரித வேகத்தில் மேற்கொள்ள உதவி வழங்கி வருகிறது.

இந்த நிறுவனம் மன்னார் கடற்படுகையில் உள்ள மூன்று பாரிய எண்ணெய்க் கட்டங்களில் ஆய்வுகளை மேற்கொள்ளும் பணியை எற்றுக் கொண்டுள்ளது.

கெயின்ஸ் லங்கா நிறுவனம் இந்த ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆழ்கடலில் பணிபுரிவர்களுக்கென உணவு போன்ற பொருட்களையும், ஏனைய அத்தியாவசிய வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்காகவும், கப்பல்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கும், எண்ணெய் அகழ்வு மற்றும் ஆய்வுப் பணிகளையும், காலநிலை பற்றி முன்கூட்டியே அறிவிப்பதற்கான பணிகளையும் சரியான முறையில் செய்வதற்கான உப ஒப்பந்தக்காரர்களையும் சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

## கொமர்ஷல் வங்கியின் 400-வது ஏரிஎம் திறப்பு




கொமர்ஷல் வங்கி நாடளாவிய ரீதியில் 24 மணிநேரமும் இயங்குகின்ற தனது காசு பரிமாற்ற முறைமைக்குள் 400-வது தன்னியக்க ரெலர் இயந்திரத்தை ருவான்வெல கிளையில் அமைத்ததன் மூலம் இணைத்துக் கொண்டுள்ளது.

3 மில்லியனுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள கொமர்ஷல் வங்கியின் ஏரிஎம் வலையமைப்பின் ஊடாக நாளொன்றிற்கு ரூ.450 மில்லியனுக்கு மேற்பட்ட ஒரு இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணப் பரிமாற்றல்கள் இடம்பெறுகிறது என கொமர்ஷல் வங்கி குறிப்பிட்டுள்ளது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## மும்பையில் கிளை திறக்க இலங்கை வங்கி திட்டம்

இலங்கை வங்கி இந்தியாவின் மும்பையில் கிளை திறக்க திட்டமிட்டுள்ளதாக வங்கியின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மும்பை இந்தியாவின் நிதி மையம். அதனால் நாம் அங்கு இருக்க வேண்டும் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் வர்த்தக தலைநகரான மும்பை ஒரு கோடி 40 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டது. அங்கு மிகச் சிறந்த வங்கிக் கட்டமைப்புகள் உள்ளன. உலகளாவிய நிதி நிறுவனங்களுடனான தொடர்புக்கும் இது இலங்கை வங்கிக்கு அவசியம்.

அத்துடன், தூத்துக்குடி மற்றும் இராமேஸ்வரத்தில் மேலும் 2 கிளைகளை அமைக்க வங்கி திட்டமிட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ளதால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கும். இதைக் கருத்தில் கொண்டு தூத்துக்குடியிலும், இலங்கை தமிழர்கள் பலர் தங்கியிருப்பதால் இராமேஸ்வரத்திலும் கிளை அமைக்க முடிபு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கெனவே சென்னையில் இலங்கை வங்கி கிளை செயற்படுகிறது. சென்னையில் இருந்து கொழும்புக்கு அதிகளவான இறக்குமதிகள் செய்யப்படுவதால் இக்கிளையின் வர்த்தக நடவடிக்கைகள் சிறப்பாகவுள்ளன என்றார்.

இந்தியாவில் ஒரு வங்கி கிளை திறப்பதானால் 25 மில்லியன் அமெரிக்க டொலர் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.



பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, உலக வங்கியால் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் டைரிரு ஹேறயை ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வாரம் சந்தித்ததை படத்தில் காணலாம்.

## எல்.ஓ.எல்.சி. கிளைகளில் கொமர்ஷல் வங்கியின் ஏரிஎம்

எல்.ஓ.எல்.சி.குழுமத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் கொமர்ஷல்வங்கியின் ஏரிஎம் (ATM) இயந்திரங்களை பொருத்தும் முன்னோடிச் செயற்பாடொன்றிற்கான உடன்படிக்கையில் எல்.ஓ.எல்.சி. குழுமத்தின் உறுப்பினரான லங்கா ஒரிக்ஸ் பைனான்ஸ் கம்பனியும் கொமர்ஷல் வங்கியும் கைச்சாத்திட்டுள்ளன.

மேற்படி உடன்படிக்கையின்படி, லங்கா ஒரிக்ஸ் பைனான்ஸ் கம்பனியின் சேமிப்பு கணக்குகளை வைத்திருப்போர் இனி அவர்களுடைய நிதி தொடர்பான தேவைகளை நாடு முழுவதும் இருக்கும் கொமர்ஷல் வங்கியின் ஏ.ரி.எம் இயந்திரங்கள் ஊடாகவும் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

அதேபோன்று கொமர்ஷல் வங்கியின் கார்ட் கணக்குள்ளவர்கள் அது தொடர்பான செயற்பாடுகளை புதிதாக எல்ஓஎல்சி (LOLC) கிளைகளில் அமையவுள்ள ஏரிஎம் இயந்திரங்கள் மூலமும் இனி நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

லங்கா ஒரிக்ஸ் பைனான்ஸ் கம்பனி 2003 ஜுன் மாதத்தில் தனது சேவையை ஆரம்பித்தது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.25 | 111.97 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 174.56 | 178.73 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 150.04 | 154.58 |
| சுவிஸ் பிராங் | 115.60 | 119.34 |
| கனேடிய டொலர் | 109.73 | 113.34 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.11 | 111.68 |
| சிங்கப்பூர் டொலர் | 85.42 | 88.03 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.44 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.23 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7254.01 | 7192.49 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7292.95 | 7165.32 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 19,425.03 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* லங்கா அலுமினியம் (60.70), திறீ ஏக்கர் பார்ம்ஸ் (180.70), கிரேன் எல்வேற்றர் (197.00), ஹொரன (63.00), பிசி ஹவுஸ்(30.60).

*சரிவடைந்த பங்குகள்(ரூ.):* ஏசியன் அலைன்ஸ (126.00), எம்.ரி.டி. வோல்கர்ஸ் (60.60), என்வெயர்மென்ட் றிசோசஸ்(W) (42.70), என்வெயர் றிசோசஸ்(W) (42.70), என்வெயர். றிசோசஸ்(W)(42.70), மேலதிக தகவல்கள்: www.cse.lk

## 2010-ல் அதிகூடிய சிடிஎஸ் க/குகள் திறப்பு

2010இல் அதிகூடிய எண்ணிக்கையான பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் புதிதாக மத்திய வைப்புத்திட்ட கணக்கு (CDS) கணக்குகளை ஆரம்பித்துள்ளனர். இது கடந்த 4 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையிலும் அதிகமாகும்.

கொழும்பு பங்குச்சந்தையில் கடந்த ஆண்டு 57 ஆயிரத்து 93 புதிய சிடிஎஸ் கணக்ககள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது 2009 உடன் ஒப்பிடுகையில் 27 வீத அதிகரிப்பாகும்.

2001-ம் ஆண்டு 3 இலட்சத்து 26 ஆயிரத்து 257 ஆக காணப்பட்ட சிடிஎஸ் கணக்குகள் 2010-ல் 5 இலட்சத்து 54 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

2001 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளை புதிதாக ஆரம்பித்தவர்களும், மொத்த எண்ணிக்கையும் பின்வருமாறு;

| ஆண்டு | புதிய கணக்குகள் | மொத்தம் |
|---|---|---|
| 2001 | 5,067 | 326,257 |
| 2002 | 11,016 | 337,273 |
| 2003 | 21,440 | 358,713 |
| 2004 | 21,348 | 380,050 |
| 2005 | 56,465 | 436,526 |
| 2006 | 14,823 | 451,349 |
| 2007 | 15,020 | 466,369 |
| 2008 | 11,833 | 478,202 |
| 2009 | 18,705 | 496,907 |
| 2010 | 57,093 | 554,000 |

## சிட்டி குருப் தலைமை நிறைவேற்று அதிகாரி; சம்பளம் 1.75 மில்லியன் அமெரிக்க டொலர்





சிட்டி குரூப் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி (CEO) விக்ரம் பண்டிட்டின் சம்பளம் 1.75 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

கடந்த 2009-ம் ஆண்டு நிலவிய சர்வதேச நிதி நெருக்கடியின் போது, சிட்டி குரூப் சந்தித்து வந்த நெருக்கடியை சமாளிக்க அந்நிறுவன சி.இ.ஓ, ஒரு டொலர் மட்டுமே சம்பளம் பெறப்போவதாக அறிவித்து, பெற்றும் வந்தார்.

இந்நிலையில் 2007-ம் ஆண்டுக்குப் பிறகு, சிட்டி குரூப் லாபம் ஈட்டியுள்ளதால், விக்ரமின் சம்பளம் 1,749,999 டொலராக அதிகரிக்கப்பட 1.75 மில்லியன் டொலராக(19.25 கோடி ரூபாய்) இருக்கிறது.

# ஆடுகளம்



தமிழ் சினிமாவுக்கு மீண்டும் ஒரு மதுரை வாசம். அது என்னமோ என்ன மாயமோ தெரியவில்லை... மதுரையை மையமாக வைத்து எடுக்கிற படமல்லவா .வரிசையாக ஹிட். அந்த வகையில் ஆடுகளம் இன்னொரு ஹிட். தனுசுக்கு நீண்ட இடைவேளைக்குப்பின்னர் நெத்தியடி அடிக்கிற மாதிரி ஒரு படம். பொல்லாதவனுக்குப் பின்னர் தெளிவான ஆய்வுகளோடு ஆடுகளத்தில் இறங்கி இருக்கிறார் இயக்குநர் வெற்றிமாறன்.

சேவல் சண்டையில் பேட்டைக்காரன் (ஜெயபாலன்) சேவல்கள் தோற்றதாக சரித்திரமே இல்லை. சேவல்களை வளர்ப்பதிலும் வித்தைகளை கற்றுத் தருவதிலும் வல்லவன் பேட்டைக்காரன். இவரிடம் இருக்கும் பாசங்களில் இவர் நம்புவது இரண்டே பேர்தான். ஒருவன் கருப்பு (தனுஷ்), இன்னொருவன் துரை(கிஷோர்). ஆனால் பேட்டைக்காரன் சேவலை எப்படியாவது தோற்கடித்துவிட வேண்டும் என்கின்ற இலட்சியம் இரத்தனசாமிக்கு . இரத்னசாமி(நரேன்) பொலிஸாக இருந்தாலும் சேவல் சண்டையில் வெற்றி பெறுவதில் தான் தன் மானமே அடங்கி இருக்குன்னு நினைக்கிறவர்.


சேவல் சண்டைகளில் கருப்பு வளர்க்கும் சேவல் சக்கைபோடு போடுது. எந்த சேவலாக இருந்தாலும் சரி ... கருப்போட சேவல் அதை வென்றுவிடுகிறது. இன்னொரு பேட்டைக்காரன் என்று பெயர் வாங்கி விடுகிறான் கருப்பு. இங்க தான் பிரச்சினையே ... கருப்பு வளர்வது பேட்டைக்காரனுக்குப் பிடிக்காமல் போக கருப்பின் கதையை முடிக்க பிளான் போடுகிறார். இல்லாத சங்கதிகளை இருப்பதாக சொல்லி துரைக்கும் கருப்புக்கும் சண்டை மூட்டி விடுகிறார். கடைசியில் ஆறுதலான க்ளைமாக்ஸ்.

இதுல எங்க ஹீரோயின் வந்தாங்க என்று கேட்கிறீர்களா? ஹீரோயின் இல்லைன்னாலும் கதை இருக்கும். இருந்தாலும் தமிழ் படத்துல ஹீரோயின் இல்லாமலா. ஆனாலும் அந்த வேலையையும் ரொம்ப யதார்த்தமாக செய்திருக்கிறார் வெற்றிமாறன். ஐரின் கதாபாத்திரத்தில் ஆங்கிலேய இந்தியப் பெண்ணாக டப்சி .ஒரு வித்தியாசமான ஹீரோயின்.




அழுக்கு லுங்கி, கசங்கின சட்டையோடு தனுஷ் ஒரு துடிப்பான தோற்றம் .தமிழும் இங்கிலிசும் கலந்த மாதிரி மதுரை நகர பாஷை பேசும் போது தனுஷை வெற்றிமாறன் எவ்வளவு வேலைவாங்கி இருக்காருன்று தெரியுது. எழுத்தாளர் ஜெயபாலன் நூறுபடத்தில நடித்தவர் மாதிரி அப்படி ஒரு நடிப்பு. கிஸோர் பல படங்களில் கலக்கியவர். இதிலும் அளவாள நடிப்பு. அவருக்கு இயக்குநர் சமுத்திரக்கனி பின்னணி குரல் கொடுத்திருப் பது கூடுதல் பலம் . புதுமுக ஹீரோயின் டப்சி பெப்சி மாதிரி ரொம்ப கூல்

திரைவிமர்சனம்



படத்தின் முதல் பாதி சரசர வேகம். இரண்டாவது பாதியில் ஒரு வேகத்தடை போட்ட மாதிரி கொஞ்சம் செண்டிமென்ட் காட்சிகள். ஒரே அடிதடி என்று இருந்தா எப்படி? பெண்களுக்கு சில காட்சிகள் வேண்டாமா... அதுவே ஓவர் சென்டிமென்டாக இல்லாமல் இருந்தவரைக்கும் நல்லது. காரணமில்லாத கதாபாத்திரங்கள், தேவையில்லாத காட்சிகள் இவை எல்லாம் ஓரம் கட்டி விட்டு கதைக்கு எது தேவையோ அதை செய்திருக்கிறார் வெற்றிமாறன்.

ஜீ.வி.பிரகாஷின் பாடல்களில் யுவன் ஷங்கர் ராஜாவின் சாயல் இல்லாமல் இல்லை. சினேகனின் வரிகளில் 'வெள்ளாவியில் வெச்சுத்தான் வெளுத்தாய்ங்களா? உன்ன வெய்யிலுக்கு காட்டாமல் வளர்த்தாய்ங்கள...' ரசிகர்களின் சராமாரியான கைதட்டல்களோடு 'யாத்தே யாத்தே' பாடல் பட்டையைக் கிளப்புகிறது.

கிராபிக்ஸில் காட்டப்படும் சேவல் சண்டைகளிலும் ஹீரோயிசத்துக்கான சஸ்பென்ஸ் தக்க வைத்திருப்பது சபாஷ். வெற்றிமாறனின் இன்னொரு வெற்றி.

## வெற்றியில் விஜய்! அடுத்த-திட்டம்

காவலன் லேட்டா வந்தாலும் லேட்டஸ்ட்டா ஆகிட்டான் என்று கும்மி கொட்டி வருகிறது விஜய் ரசிகர் வட்டாரம். அண்மைக்காலமாக கடுப்பில் இருந்த விஜய் காவலன் வெற்றியில் குஷியாகி இருக்கிறார். காவலன் படம் பல சிக்கல்களால் தாமதமாகியது. தாமதமான போதும் தன் படத்திற்காக பொறுமையோடு காத்திருந்த ரசிகர்களுக்கு நன்றியையும் தெரிவித்திருக்கிறார் விஜய்.

அரசியலைப் பற்றி ஏதாவது கேட்டால், "ண்ணா... அரசியல் கேள்விகள் வேணாம் ண்ணா" என்று சொல்லும் விஜய் வேலாயுதம் படத்தின் ஷூட்டிங்கில் படு பிசியாக இருந்து வருகிறார். வேலாயுதம் ஷூட்டிங் சென்னை துறைமுகத்தில் நடந்துவருகிறது. விஜய்யின் முழு சிந்தனையும் இப்போது வேலாயுதம் படத்தில் தானாம். வேலாயுதம் படத்தை விஜயின் பிறந்தநாளுக்கு வெளியிட முடிவு செய்திருக்கிறார்கள். (அப்போ விஜய் ரசிகர்களுக்கு இன்னொரு பொங்கல் இருக்கு டோய்.... கலக்குங்ண்ணா)



காவலன் வெற்றி பெற்றுள்ளதால் மீண்டும் தயாரிப்பாளர்கள் விஜயின் வாசலில் வரிசைக் கட்டுகிறார்கள். அடுத்து கலைப்புலி தாணு தயாரிப்பில் சீமான் இயக்கத்தில் 'பகலவன்' படத்தில் நடிக்கிறார் விஜய். பகலவன் படத்தின் முழு கதையும் கேட்டதால் விஜய்க்கு ரொம்ப திருப்தி.

'ராஜா சின்ன ரோஜா' மாதிரி முழுக்க முழுக்க குழந்தைகளுக்கான ஒரு படத்தில் நடிக்க வேண்டும் என்பது விஜயின் ஆசையாம்.(என்னப்பா இதுவரைக்கும் கச்சிப்பையே கத்தியா யூஸ் பண்ணவரு... திடீர்ன்னு இப்படி குழந்தை மனசுக்காரரா ஆகிட்டாரு)

இயக்குநர் சேரன் கதை சொன்ன போதெல்லாம் அந்த படங்களை ஏதோ ஒரு காரணத்துக்காக தவிர்த்தார் விஜய். ஆனால் இப்போதோ கிராமத்தில் விவசாயிகள் குறைந்துவிட்டார்கள். விவசாயத்தின் முக்கியத்துவமும் குறைந்துவிட்டது. இந்த மனப்போக்கு மாற வேண்டும். இதையும் வெளிப்படுத்துகிற மாதிரி ஒரு படத்தில் நடிக்கப் போகிறேன் என்று சொல்கிறார் விஜய்.(இது புதுசாவுல இருக்கு)

அடுத்தடுத்து படங்களை யோசிப்பதற்கு விஜய்க்கு ஒரு உற்சாக மருந்து மாதிரி அமைந்து இருக்கிறது காவலன் கொடுத்த வெற்றி!

## மீண்டும் ஒரு சிகப்பு ரோஜாக்கள்

நடுநிசி நாய்/ ள் என்ற படத்தை உருவாக்கியுள்ளார் கௌதம் மேனன்.இது திரில்லர் வகையான படம். இந்தப் படத்தைப் பார்த்த சென்சர் குழு படத்தின் ஒரு காட்சியைக் கூட நீக்காமல் படத்திற்கு 'ஏ' சான்றிதழ் கொடுத்திருக்கிறது. இந்தப் படத்தில் பாடல்களே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.படம் எதிர்வரும் 11ஆம் திகதி திரைக்கு வருகிறது.

படத்தின் மையப் பாத்திரமான வீரா மற்றும் அனைத்து பாத்திரங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு பயங்கரமான இரவில் நடக்கும் சம்பவங்கள், அவன் மனதில் ஏற்படும் பாதிப்புக்களை மையமாகக் கொண்டு கதையை அமைத்திருக்கிறார் இயக்குநர் கௌதம்மேனன். படத்தைப் பற்றிப் பேசிய கௌதம் மேனன்,




1978 இல் பாரதிராஜா இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்து பெரும் வெற்றியடைந்த "சிகப்பு ரோஜாக்கள்" படத்திற்குப் பின்னர் தமிழில் உளவியல் சார்ந்த திரில்லர் படமாக நடுநிசி நாய்கள் இருக்கும் எனத் தெரிவித்தார்.

தமிழுக்கு 'வாரணம் ஆயிரம்' படத்தின் மூலம் அறிமுகமான சமீரா ரெட்டி இந்தப் படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். வீரா மைய கதாபாத்திரமாக நடிக்க நான்கு புது முகங்கள் இந்த படத்தில் அறிமுகமாகிறார்கள். நடுநிசி நாய்கள் திரில்லர் படவகையை சேர்ந்ததல்ல என்றாலும் பலவீனமான இதயம் உடையவர்கள் படத்தைப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

படத்தைப் பார்த்தவர்கள் இது நல்ல முயற்சி என்றும் இது பல விடயங்களை மீறி அனைத்து தரப்பினரையும் கவரும் என்றும் பாராட்டி உள்ளனர். படத்தில் உள்ள சமூகத்திற்கான செய்தியை அனைவரும் உணரும் வகையில் படத்தின் சிறப்புக் காட்சிகள், பப்ளிசிட்டி போன்ற முயற்சிகளில் இருந்து வருகிறார் இயக்குநர் கௌதம் மேனன்.





## சிம்புத்தேவன் இயக்கத்தில் தனுஷ்



டைரக்டர் ஹரியின் 'வேங்கை' ,சுப்பிரமணியம் சிவாவின் 'சீடன்' , செல்வராகவனின் 'இரண்டாம் உலகம்' என அடுத்தடுத்து கைநிறைய படங்களுடன் மிக பிஸியாக உள்ளார் நடிகர் தனுஷ்.

அதற்கிடையில் இம்சை அரசன் 23ஆம் 'புலிகேசி', 'இரும்புக்கோட்டை முரட்டுசிங்கம்' போன்ற வெற்றி படங்களை இயக்கிய சிம்புத்தேவன் அடுத்து தனுஷை வைத்து ஒரு படம் இயக்குகிறார் இந்தப் படமும் தனது முந்தைய படத்தை போன்று வித்தியாசமாக இருக்குமாம்.

## ஏப்ரலில் பில்லா 2! அஜித் ஜோடி அனுஷ்கா!!



பில்லா 2 படத்தின் சூட்டிங் ஏப்ரலில் தொடங்க விருப்பதாகவும் அப்படத்தில் அஜித் ஜோடியாக அனுஷ்கா நடிக்கப் போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அஜித் நடித்த பில்லா ரீ- மேக் படம் திரையிடப்பட்ட எல்லா இடங்களிலும் சுப்பர் டூப்பர் ஹிட்டடித்தது. அஜித்தின் அதிரடி நடிப்பும் நயன்தாரா- நமீதாவின் கவர்ச்சியும் ஒளிப்பதிவும் படத்திற்கு வெற்றியை தேடித் தந்தது.

பில்லா வெற்றிக்கு பின்னர் பில்லா பார்ட் 2 படம் எடுக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாயின. ஆனால் அஜித் அடுத்த படங்களில் பிஸியாகி விட்டதால் பில்லா 2 தள்ளிப் போனது. இந்நிலையில் இப்போது மீண்டும் பில்லா பற்றிய பேச்சு எழுந்துள்ளது.

டைரக்டர் விஷ்ணுவர்தன் இயக்கத்தில் உருவாகும் இந்த படத்தை சுரேஷ் பாலாஜி தயாரிக்கிறார். நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்ய யுவன்ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். ஏப்ரல் மாதம் பில்லா 2 படத்தின் சூட்டிங் தொடங்குகிறது. அஜித் ஜோடியாக நடிகை அனுஷ்கா நடிக்கவுள்ளார். அவர் ஏற்கனவே பில்லா தெலுங்கு பதிப்பில் நாயகியாக நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




யாழ்.மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் உள்ளூராட்சித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் அருகில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதிவசந்தகுமார் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-என்.குமார்)

# கடும் வெப்பமான கிரகம் கண்டுபிடிப்பு



விண்ணில் சூரிய குடும்ப கிரகங்கள் மட்டுமின்றி எண்ணிலடங்கா கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்கள் உள்ளன. இது குறித்து ஆராய்ச்சி செய்து வரும் விஞ்ஞானிகள் புது புது கிரகங்களை கண்டுபிடித்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது புதிதாக ஒரு கிரகத்தை கண்டுபிடித்துள்ளனர். டபிள்யூ.ஏ.எஸ்.பி.-33 பி என்று இதற்கு பெயரிட்டுள்ளனர். இதை எச்.டி. 15082 என்றும் அழைக்கின்றனர். இது மிகவும் கடுமையான வெப்பம் உடைய கிரகமாகும். 7160 டிகிரி செல்சியஸ் வெப்பத்துடன் இது உள்ளது.

தற்போது இதுதான் மிகுந்த வெப்பமுடைய கிரகம் என கருதப்படுகிறது. ஏனெனில் சூரியனின் வெப்பம் 5 600 டிகிரி செல்சியஸ்தான். இதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் 3 200 டிகிரி செல்சிய்ஸ் வெப்பம் கொண்டதாக இருந்தது.இது அதை மிஞ்சி இரு மடங்கு வெப்பத்தை வெளிப்படுத்துகிறது. கடந்த 2006ஆம் ஆண்டு தான் முதன் முதலாக இந்த கிரகம் விஞ்ஞானிகளால் அறியப்பட்டது.

அதன் பின்னர் தான் ஆய்வு மேற்கொண்டனர். இது வியாழன் கிரகத்தை விட 4 1/2 மடங்கு பெரியது. மேலும் சூரியனுக்கும் புதனுக்கும் இடையே 7 சதவீதம் குறைவான தூரத்தில் இது உள்ளது. (ஶ்ரீ-2)

# அரசியல்வாதிகளுக்கு டாக்டர் பட்டம் வழங்குவது தடுத்து நிறுத்தப்படவேண்டும்

## உயர் கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)



அரசியல்வாதிகளுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் நடைமுறை நிறுத்தப்படவேண்டுமென உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி மேம்பாடு தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பலருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் சிலருக்கு மட்டும் பல்கலைக்கழகங்களினால் முறையாக டாக்டர் பட்டம் வழங்கப்படும் அதேவேளை ஏனைய பலர் மர நிழலில் இவ்வாறான பட்டங்களை பெற்றுக் கொள்வதாக அவர் விமர்சனம் செய்துள்ளார்.


குறிப்பாக அரசியல்வாதிகளுக்கு டாக்டர் பட்டங்களை வழங்கும் போது நிதானத்துடன் வழங்கப்படவேண்டுமெனவும் முறையற்ற விதத்தில் அரசியல்வாதிகளுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் நடைமுறை தடுத்து நிறுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் மரமொன்றின் கிளைகளைப் போன்று தான்தோன்றித் தனமாக டாக்டர் பட்டம் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# 43 ஆண்டுகளாக விடுமுறை எடுக்காமல் பணிபுரிந்த முதியவர்

இங்கிலாந்தில் உள்ள எஸ்செஸ் என்ற இடத்தை சேர்ந்தவர் ஜிம்ஓவன் வயது (66) ஆகும். தற்போது இவர் பாசில்டன் கவுன்சிலில் பணிபுரிகிறார். இங்கு அவர் கடந்த 1968 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை அதாவது 43 வருடங்கள் ஒருநாள் கூட விடுமுறை எடுக்காமல் பணியாற்றி வருகிறார். இந்த தகவலை அந்நாட்டு பத்திரிகை வெளியிட்டுள்ளது.

தனது பணி குறித்து ஜிம் ஓவன் கூறும்போது, தினமும் அதிகாலையில் எழுந்து மகிழ்ச்சியுடன் எனது பணியை தொடங்குவேன் . இது எனக்கு உற்சாகத்தை அளிக்கிறது. மேலும் நான் சத்தான உணவுகளை சாப்பிடுகிறேன். புகைப்பிடிக்கும் பழக்கம் கிடையாது. வேலை செய்யும் போது சுத்தமான காற்றை சுவாசிப்பதால் நான் ஆரோக்கியமாக வாழ்கிறேன். தற்போது எனக்கு ஓய்வு பெறும் வயது வந்துள்ளது. இருந்தாலும் பணியில் இருந்து ஓய்வுபெற நான் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். ஜிம் ஓவனுக்கு 2 மகன்களும் 3 பேரக்குழந்தைகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)



வடலியடைப்பு சைவப்பிரகாசா வித்தியாலயத்தில் யூனியன் அஷ்யூரன்சினால் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யூனியன் அஷ்யூரன்ஸ் விற்பனை முகாமையாளர் கோ. சிறீவரதன் மற்றும் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

# வைத்தியர் ஒருவரிடமிருந்து ரூ.850 இலட்சம் பண மோசடி

(கொழும்பு)

குருநாகலைச் சேர்ந்த நபரொருவர் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகக் கொண்ட இலங்கை வைத்தியர் ஒருவரிடமிருந்து 850 இலட்சம் ரூபாவை நம்பிக்கை மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் குருநாகலில் ஹோட்டல் ஒன்றைக் கட்டித் தருவதாகக் கூறியே இப் பணத்தை மோசடி செய்துள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி வைத்தியர் அண்மையில் விடுமுறையை கழிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இதன் போதே இம் மோசடி தொடர்பாக அறிந்துகொண்டார்.

இதனையடுத்து இவர் குருநாகல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் இது தொடர்பாக குருநாகல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஶ்ரீ-2)


2 1/2 வருடங்களில் சர்வதேசத் தரம் வாய்ந்த
UK Degree

London College of Management கொழும்பில் அமைந்துள்ள **British College of Business Study** இன் ஊடாக வழங்கும் ஓர் வாய்ப்பு

- 3 வருட வீசா
- மாணவர் திருமணமானவர் எனின் அவர் துணைவர்/துணைவியும் UK சென்று முழுநேர வேலைவாய்ப்பை பெற அனுமதியுண்டு.
- A/L தகைமை இருப்பது நன்று
- கட்டணங்கள் £ 3500 இலிருந்து உண்டு.
- IELTS தேவையில்லை
- உடனடி பதிவுகள், அனுமதிகள் (Spot Admission & Registration) கல்லூரி அதிதியால் வழங்கப்படும்.
- தேவையான கடனை வழங்க வங்கி ஒன்றும் ஒழுங்கு செய்து தரப்படும்.

காலம் :- 01st February 2011 நேரம்:- 1.00 pm- 3.00 pm
தொடர்புகளுக்கு:- 011 2301691, 0772227393, 072 8301233

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

*சிறகுவிரித்ததோ வானத்தில்*
*ஏறியோர் சிட்டுக்குருவி*
*பறக்குதே... அது விடுதலை.*
*உறவுகூடிச் சிற்றெறும்புகள்*
*அணிவகுத்து ஊருகின்றன வேயது*
*விடுதலை. இறைமையோடுதான்*
*நானென்ன இருந்திடும் இருப்பு*
*என்பதே விடுதலை எனப்படும்*
*வறுமை வந்துறும்*
*போதுமின்னொருவனின்*
*வாசல்நின்றிடா வாழ்வதே*
*விடுதலை!*

-புதுவையாரின் கவிதை புலன்களை முறுக்கிறது வாழக்கதியற்ற ஏழைகளின் வறுமையையே வாழ்வாதாரமாகக் கொண்டு தமிழக அரசியல் வாழ்ந்து வருகிறதே... மின்சாரத் தட்டுப்பாடு, விலைவாசி ஏற்றம், சட்டம் ஒழுங்குச் சீர்கேடு, சாதியப் பிரச்சினைகள், குழந்தைகள் கடத்தல், கல்விக் குளறுபடிகள், தற்கொலைகள் என என்னதான் ஆயிரம் பிரச்சினைகள் நிலவினாலும், ஆயிரம் ரூபாய் நோட்டின் மூலம் அனைத்தையும் மறக்கடித்துவிட முடியும் என நினைக்கிறது ஆளும்கட்சி.

வாக்குப் பணம் வாங்குவது தவறு என்பது தெரிந்தும், வாழ்க்கையை ஓட்ட வக்கற்ற நிலையால் கையேந்தும் நிலையில்தான் கடைக்கோடி தமிழனும் இருக்கின்றான்.



வறுமையை தமிழக அரசியல்வாதிகள் வாழவைக்கும் பின்னணி வாக்குகளை விலைக்கு வாங்குவதற்குத்தான்!

ஒரு ரூபாய் அரிசித் திட்டத்தால் பலன் அடைபவர்கள் ஒரு கோடியே 88 இலட்சம் பேர், கூட்டுறவு கடன் தள்ளுபடியால் பலன் பெற்றவர்கள் 23 இலட்சம் பேர், இலவச தொலைக்காட்சிப் பெட்டி வாங்கியவர்கள் ஒரு கோடியே 50 இலட்சம் பேர், கலைஞர் காப்பீட்டுத்திட்டத்தில் நலம் பெற்றவர்கள் ஒரு கோடியே 34 இலட்சம் பேர்... இன்னும் இன்னும் பல கணக்குகளைப் போட்டு மொத்தமாக பலன் பெற்றவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுக்கொண்டு இருக்கிறது ஆளும் தி.மு.க. அரசு.

கவர்ச்சித் திட்டங்களாலேயே வாக்குகளைக் கவர முடியும் என்பதை உணர்த்துகின்ற கணக்கு இது. 'இதை விதைத்தால் இதை அறுக்கலாம்' என்கிற வணிக நோக்கம் மட்டுமே கொண்ட ஒரு வியாபாரியைப் போல் அரசியல்வாதிகள் இன்றைக்கு இயங்கத் தொடங்கி விட்டார்கள்.

வயிற்றுக்கு மீன் வழங்க வேண்டியவர்கள் தொண்டையைக் குறிவைத்து புழுகோர்க்கப்பட்ட தூண்டிலை வீசுவது வாக்குகளை வளைக்க வேண்டும் என்பதால் தானே! அதற்காகவே,பணத்தை இறைக்கிறார்கள், கவர்ச்சித் திட்டங்களை குவிக்கிறார்கள், தேர்தல் நெருங்க நெருங்க தெருக்கள் தோறும் வலம் வருகிறார்கள். 'இப்படி ஒரு இடம் இருக்கிறதா' என்பதைக்கூட இத்தனைகாலம் அறியாமல் இருந்தவர்கள் குக்கிராமம் பகுதியிலும் குனிந்து நுழைகிறார்கள்.

பதவிப் பகட்டுகளில் மிதந்தவர்கள், திடீரென நம்மைத் திரும்பிப் பார்ப்பது ஏன்? கடன் கேட்டாலும் கொடுக்க மறுத்தவர்கள் வலிய வந்து கவர் போட்டு பணத்தைத் திணிப்பது ஏன்? அலுவலகம் தேடிப்போய் அலைந்து திரிந்தாலும் காண மறுத்தவர்கள் வீடு தேடி வந்து விசனம் விசாரிப்பது ஏன்? வாக்கு என்ற ஒற்றை வார்த்தையை வளைக்கத்தானே இத்தனை கூத்துக்களும் பணத்துக்கு உரிமைகளை விற்கும் இந்த இனத்துக்கு என்றைக்கடா தம்பி விழிப்பு வரும்? பாலில் சத்தியம்

**14 சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...**

வாங்கி, தலைப்பிள்ளை உச்சியில் அடித்து, சாமியின் சந்நிதியில் முன்னிறுத்தி ,பணத்தைக் கொடுத்து, வாக்குக்கு பேரம் பேசும் ஈனத்தனங்களை தமிழன் எப்படியடா தாங்கிக் கொள்கிறான்?

## வாங்கிக்கொண்டு வாக்களிப்பது போன்று தான் வாக்களிக்காமல் புறக்கணிப்பதும் மோசமானது

'யப்பா சாமி உனக்கு ஏதப்பா இவ்வளவு பணம், நாத்து பறிச்சியா? சேத்துல உருண்டியா? எங்கிருந்தப்பா சேத்த இவ்வளவு பணத்த? தேடிவந்து பணம் கொடுக்க நீ என் பங்காளியா... அங்காளியா?' எனக் கொடுக்க வந்தவர்களை உன் கொடுக்கால் கொட்டாதது ஏனடா தமிழா?

அவனிடம் கொடுத்த வாக்கைக் காப்பதாக சொல்லி உன்னிடம் உள்ள வாக்கை ஊனமாக்குவது தவறில்லையா தமிழா? கவர்ச்சித் திட்டங்களால் உன்னை மட்டமாக்கியவர்கள் கடைசி நேர பணத்தால் உன் சினத்தையும் சிதைக்கிறார்களே... இந்த தேசத்தின் அழுக்கை பொடி பொடியாக்கத் தானடா உன் விரலில் மை வைக்கிறார்கள். ஒரு துளிமையால் மொத்தத்தையும் சுத்தமாக்கும் வாய்ப்பு எப்போதடா வாய்க்கும். பிரியாணி பொட்டலத்தால் உன் வாக்கை பிரிக்கப்பார்ப்பதும், மது புட்டியால் உன்னை மயக்கப் பார்ப்பதும் இன்னும் எத்தனைக் காலத்துக்கு தமிழா தொடரும்?

சமீபத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தின் கடலோரப் பகுதியான பேராவூரணியில் நடந்த பொதுக்கூட்டத்தில் நான் பேசினேன். இன்றைய போக்கின் சக்தியையும் நம் வாக்கின் சக்தியையும் உரக்கச் சொன்னேன். கட்டுக் கடங்காத கூட்டம் கொட்டக் கொட்ட கேட்டது. கூட்டம் முடிந்து திரும்புகையில் கிராமத்துச் சுவடு சுமந்த பெரியவர் ஒருவர் என் கைகளைப் பற்றிக் கொண்டு பேசினார். 'நீங்க பேசுற தைக் கேட்கிறப்ப இரத்தமே முறுக்கேறுது தம்பி. நீங்க சொல்ற மாதிரி அஞ்சுக்கும் பத்துக்கும் ஆசைப்பட்டு ஓட்டுப்போடுற கூட்டம் தான் நாங்க.



ஆனா, இந்த தடவை நிச்சயம் பணம் வாங்கமாட்டோம். இருந்தாலும் நாங்க யாருக்குத் தம்பி ஓட்டுப் போடுறது?' எனக் கேட்டார். பணம் வாங்கக் கூடாது என்று முடிவெடுத்ததே ஜனநாயகத்துக்கு கிடைத்த பாதி வெற்றிதான். 'யார் வரவேண்டும் என்பதை தீர்மானிக்க முடியாவிட்டாலும் யார் வரக்கூடாது என்பதை நிச்சயமாக நீங்கள் புரிந்திருப்பீர்கள். அதுவே உங்கள் வாக்கு யாருக்கு என்பதை உங்களுக்கு உணர்த்தி விடும்' என்று சொன்னேன். அந்தக் கடலோரத் தமிழனிடம் ஏற்பட்ட விழிப்பும் முழிப்பும் கடைக்கோடித் தமிழனுக்கும் ஏற்படும் நாளில் நிச்சயம் இந்த தேசத்துக்கு நிம்மதி பிறக்கும்.

இதில் கொஞ்சமும் சகிக்க முடியாத கொடுமை என்னவென்றால்,வாக்குப் போடுவதை தேவையற்ற வேலை என்று எண்ணி அதைப் புறக்கணிப்பது. வாங்கிக் கொண்டு வாக்கு போடுவது எவ்வளவு மோசமான காரியமோ, அதற்குச் சற்றும் குறையாததுதான், வாக்கு போடாமல் புறக்கணிப்பதும். புறக்கணிக்கவோ,பொழுதைக் கழிக்கவோ நீங்கள் தவறவிட்ட நல்ல வாக்கு எங்கோ ஒரு மூலையில் கள்ளவாக்காக பதிவாகிறதே, அதை ஏன் உணர மறுக்கிறீர்கள்? ஒரு தொகுதியில் வெறும் நாலு ஓட்டு மட்டுமே விழுந்தாலும் அதில் மூன்று ஓட்டு வாங்கியவனுக்கு வெற்றி என்று அறிவிப்பது தான் நம் விசித்திர ஜனநாயகத்தின் வழக்கம்.

வறுமை தீரவில்லை என்று சொல்லி பணம் வாங்குபவனுக்கும் பொறுமை இல்லை என்று சொல்லி புறக்கணிப்பவனுக்கும் என்ன வித்தியாசம்? இதற்கிடையில் இன்னும் சிலரோ தங்களின் புறக்கணிப்பை பதிவு செய்யும் விதமாக 49 வீதத்திற்கு வாக்களிக்கிறார்கள். அதனால் என்ன பயன் என்பது அந்த அறிவாளிகளுக்கே வெளிச்சம். ஓ போட்டால் எதிரிகள் நமக்கு ஓ போட்டு விடமாட் டார்களா? ஒரு வாக்கால் ஒரு நாட்டின் போக்கையே மாற்ற முடியும் என்கிற உண்மை புரியாமல் வாக்காளன் இப்படி வாடிக் கிடக்கிறான் என்றால் தேர்தல் ஆணையத்தின் பாராமுகம் அதை விடப் பரிதாபம்.

கண்ணுக்கு முன்னே காசுகள் வீசப்படுவது தெரிந்தும் கைகட்டப்பட்ட நிலையில்தான் அதிகாரிகள் அல்லாடுகிறார்கள். வாக்குச் சாவடிகளில் தேர்தல் பணிக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதாலேயே அவர்களுக்கு ஆயிரம் விதமான சலுகைகளை வழங்கி ஆதாயம் தேடப் பார்க்கிறது ஆளும் கட்சி. மாற்று மாநில ஆசிரியர் பெருமக்களை தேர்தல் பணிக்குப் பயன்படுத்தினால் ஆளும் கட்சியின் ஆதாய நோக்கை நிச்சயமாக தடுக்க முடியும்.

உடனே 'மாற்று மாநிலத்தவர்களால் மொழி புரியாமல் எப்படி பணியாற்ற முடியும்?' என்ற கேள்வி பாயக்கூடும். மாற்று மாநிலத்தைச் சேர்ந்த எத்தனையோ பேர் நம் மாநில தேர்தல் ஆணையாளர்களாக பணியாற்றி இருக்கிறார்களே அடையாள அட்டை வைத்து பெயரையும் முகத்தையும் சரிபார்க்க மொழி அறிவு முக்கியமா என்ன?

தேர்தல் ஆணையம் பெரும் கவனம் எடுத்து பரிசீலிக்க வேண்டியது அடையாள மை குறித்த ஆதங்கத்தைத்தான். ஐந்து ரூபாய்க்கு பொருள் வாங்கினால் கூட பணம் கொடுத்ததற்கு சாட்சியாக பற்றுச்சீட்டு தருகிறார்கள். ஆனால் விலைமதிக்க முடியாத வாக்கை செலுத்தும் வாக்காளனுக்கு ஒரு துளி மைதான் பற்றுச் சீட்டா? வாக்காளர் அடையாள அட்டை போலவே வாக்கை செலுத்தியதற்கு ஆதாயமாக ஒரு அட்டை வழங்கலாமே. மையை அழிக்கக் கூடிய வழிமுறைகளை எல்லாம் கள்ள வாக்களிப்ப வர்கள் இதுவரை கண்டுபிடிக் காமல் இருப்பார்களா என்ன?

தேர்தலுக்கு மிகக் குறுகிய காலமே இருக்கிறது தமிழா, உன் கையில் இருக்கிற வாக்கு மிகப் பெரிய கருவி. வாக்காளப் பெருங்குடி மக்களே என வாய்பூரிக்க சொன்னபடி குனிந்த தலையும் கும்பிட்ட கைகளுமாய் உன் வீடு தேடி வருவார்கள். விலை பேசுவார்கள் ஆதரிப்பீர்.... வாக்களிப்பீர் என வாக்கு கேட்கும் வார்த்தைகளில் கூட பியர் விற்பார்கள். ஈழத்துக்காகத் துடித்தவர்களே, இல்லத்துக்காக கண்ணீர் வடிப்பவர்களே நீங்கள் இந்த நேரத்தில் வாங்க வேண்டியது காசு அல்ல.... காவு! (வளரும்)

இறைவன் எங்கோ வெகு தொலைவில் இருக்கிறார். ஆனால் பிரார்த்தனையே அவரை பூமிக்கு இழுத்துக் கொண்டு வருவதுடன் அவருடைய சக்தியையும் நம்முடைய முயற்சியையும் இணைக்கிறது. ~மாட்கோஸ்வரின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ்க் கட்சிகளின் ஐக்கியத்திற்காக தேர்தலில் எமது கட்சி பங்குபற்றாது

## பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவிப்பு

தமிழர்களின் அரசியற் கட்சிகளுக் கிடையிலான ஐக்கியத்தையும் எமது கட்சியின் யதார்த்த நிலையையும் கருத்திற்கொண்டு இம்முறை உள்ளூ ராட்சித் தேர்தலில் நாம் பங்குபற்றுவ தில்லை எனத் தீர்மானித்துள்ளோம் என பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு,

தமிழ்மக்களுக்கான ஓர் அரசியல் அதிகார விடுதலையைப் பெறல், சமூக அடிமைத்தளைகள், ஒடுக்குமுறைகளை ஒழித்தல், பொருளாதாரச் சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்டல், முற்போக் கான சர்வதேச உறவுகளை வலுப்படுத் துதல் என்ற அடிப்படையில் தோழர் நாபாவின் வழிகாட்டலில் ஒரு புரட்சிகர இயக்கமாகச் செயற்பட்ட நாம் காலப் போக்கில் தேர்தல்களில் பங்குபெறுவதற் கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டிய வர்களானோம்.

புலிகள் வல்லமை கொண்டவர்களாக இருந்தபோது மக்களோடு உறவுகளைப் பேணுவதற்கும் எமது அரசியல் வேலைத் திட்டங்களை மக்கள் மத்தியில் தக்க வைப்பதற்காகவும் நாம் தேர்தல்களில் பங்குபற்றினோம். இன்று மக்களோடு நெருங்கிப் பழகும் சூழ்நிலை ஏற்பட்டி ருக்கிறது. இருப்பினும் தேர்தல்களில் எமது கட்சி வெற்றிகரமான ஒன்றாக இருப்பதற்கான மக்கள் பலம் இப்போது எம்மிடம் இல்லை. அதனை வெற்றிகர மாக ஆக்குவதற்கான கட்சிக் கட்டமைப் புப் பலத்தையும் நாம் இன்னமும் அடைய வில்லை, தேர்தல்களைச் சந்திக்கும் பண பலமும் எம்மிடமில்லை.

இந்நிலையில் தேர்தல் ஒன்றைச் சந்திப்பதானால் தமிழர்களுக்கிடையே யுள்ள கட்சிகளுக்கிடையில் ஓர் ஐக்கியம் ஏற்படும் பட்சத்தில் நாமும் பங்குபற்றலாம் என முடிபு செய்திருந்தோம். ஆனால் அதற்கான நிலைமைகள் ஏற்படவில்லை. இந்நிலையில் எமது கட்சியானது எதிர் வரும் தேர்தலில் எந்தவகையிலும் பங்குபற்றுவது சாத்தியமுமில்லை, சரியா னதுமல்ல என முடிபு செய்துள்ளோம்.

தேர்தல்களில் எமது கட்சி மீண்டும் எப்போது பங்குபற்றும் என்பதைத் தீர் மானிப்பதற்கு முதலில் எமது கட்சியை அதன் புரட்சிகர முற்போக்குக் குணாம் சங்களிலிருந்து பிசகாது இயங்கும் நிலையை உறுதிப்படுத்துவோம்! ஒரு புரட்சிகரக் கட்சிக்குரிய அடிப்படைகளில் முறைப்படுத்தப்பட்ட கட்சிக் கட்டமைப் பைப் பரந்துபட்டதாகக் கட்டியெழுப்பு வோம்.

பரந்துபட்ட பொதுமக்கள் மத்தியில் காத்திரமான தாக்கமுடைய சக்தி கொண்ட கட்சியாக எமது கட்சியை வளர்ச்சியடை யச் செய்வோம்! இந்த அரசியல் வேலைத் திட்டங்களையே எமது கட்சியின் அடுத்து வரும் காலகட்டத்துக்கான செயற்றிட்ட மாகக் கொண்டு செயற்படுவோம் என் பதை அனைவருக்கும் அறியத்தருகின் றோம்.

எமது கட்சி எவ்வளவு தூரம் முன்னே றியிருக்கிறது, மேலும் மக்கள் மத்தியில் எந்தளவுக்கு மக்களை உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக வளர்ச்சியடைந்திருக்கிறோம் என்பதைப் பொறுத்து நாம் பின்னொரு தடவை மீண்டும் தேர்தலில் பங்குபற்றுவது பற் றித் தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற முடிபோடு தேர்தல்களில் பங்குபற்றும் விவகாரங்களை நாம் பின்தள்ளிப் போட் டிருக்கிறோம் என்றுள்ளது. (ஏ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மூன்று கட்டமாக பவ்ரல் கண்காணிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் மூன்று கட்டங்களாகக் கண்காணிப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ளவுள்ளதாகச் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர் தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப் பான பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் கண்காணிப்புப் பணிகள் மூன்று கட்டங்களாக இடம்பெற வுள்ளதாக இவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலுக்கு முன்னுள்ள காலகட்டம், தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்குப் பின்னுள்ள காலகட்டம் என மூன்று கட் டங்களாகத் தேர்தல் கண்காணிப்பு நட வடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் 301 உள்ளூராட்சிச் சபை களுக்குமான தேர்தல்களைப் பவ்ரல் அமைப்புக் கண்காணிக்கவுள்ளதாக வும் அதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளதாகவும் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-5)

# பொலிஸ் - பொதுமக்கள் இன்று சந்திப்பு

பொலிஸ் - பொதுமக்களுக்கான கலந்துரையாடல் கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்தின் அனுசரணை யுடன் இன்று பிற்பகல் 3.30 மணியள வில் சனசமூக நிலையம் அருகாமை யில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் கலந்து கொண்டு பொலிஸாரின் ஆலோசனை களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (சு)

# சித்தர்கள் பாடாரோ நம் சிவனை...

இலங்கையில் நடக்கும் இயற்கையின் சீற்றத்தைத் தணிப்பதற்காக, இந்தியாவில் உள்ள பிரம்மரிஷி மலையில் இருந்து சித்தர் களை வரவழைத்துள்ளது இலங்கை அரசு.

210 சித்தர்களின் ஆசியோடு நேற்று முன் தினம் அன்னை சித்தர் ஸ்ரீஸ்ரீ ராஜ்குமார் அவர்கள் கொழும்புக்கு வருகை தந்து நேற் றைய தினம் மகாயாகம் நடத்தியுள்ளார்.

இயற்கையின் சீற்றத்தை தணித்தல் மற்றும் மக்கள் சுபீட்சமாக வாழ வழிவகுத்தல் என்ற வகையில் யாகம் நடைபெற்றது.

யாகம் நடத்துவதற்காக இந்தியாவின் பிரம்ம ரிஷி மலையில் இருந்து இங்கு வருகை தந்த சித்தர் சிவனின் பக்தர்.

இலங்கையில் நடக்கும் இயற்கையின் சீற் றத்தை தவிர்த்தருள்க! என்று அவர் சிவனிடம் வேண்டுவார்.

இலங்கை பௌத்த நாடு என்பது பெரும் பான்மை இனத்தின் முடிபு. பெரும்பான்மை இனத்தின் முடிபின்படி புத்தபிரானின் நாடு இலங்கை. அப்படியானால் இலங்கையில் நடக் கும் இயற்கையின் சீற்றத்தைத் தவிர்க்குமாறு கௌதம புத்தரை அல்லவா வேண்டுதல் செய்ய வேண்டும்.

இலங்கையில் எல்லா மதங்களையும் மதிக்க வேண்டும் என்று இந்த நாட்டின் பிரதமர் கூற, அதற்கு ஜாதிக ஹெல உறுமய போர்க்கொடி தூக்கியதை யாரும் எளிதில் மறக்க மாட்டார்கள்.

ஆனால் அதே ஜாதிக ஹெல உறுமய ரோச முள்ள ஒரு கட்சியாக இருந்தால், நடத்தும் யாகத்தை எதிர்க்க வேண்டும்.

எங்களைப் புத்தபிரான் காப்பாற்றுவார் என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

ஏனெனில் சிவன்மீதும் சித்தர் மீதும் அவர் களுக்கு அத்துணை நம்பிக்கை.

இயற்கையின் சீற்றத்தை தவிர்க்க சிவன் தேவை. ஆனால், சிவாலயங்கள் உள்ள இடங் களை மதிக்கவும் அவற்றின் புனிதத்தைப் பேணவும் அவர்களுக்குத் தெரியவில்லை.

சிவமூர்த்தங்கள் உள்ள ஆலயங்களுக்கு அருகில் புத்தபிரானைப் பிரதிஷ்டை செய்வது, முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் ஹோட்டல் கட்டுவது இவையெல்லாம் உகந்தவை யல்ல. இதனால்தான் இயற்கை சீற்றம் கொள் கிறது.

சித்தர்கள் யாகம் செய்வது மட்டுமல்ல. நம் சிவனை பாட வேண்டும். சிவனைப் பாடி அவர் பெருமைகளை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்லவேண்டும். இயற்கையின் சீற்றம் தணிய மக்கள் வதைபடுவது நிற்க வேண்டும் என எடுத் துரைக்க வேண்டும்.


எல்லாச் சமயங்களும் தத்தம் தெய்வீகத் தைப் பேணவும், வழிபடவும், புனிதம் பேணவும் வகை செய்வது அவசியம். ஊடறுத்து ஊறு விளைவிக்கலாகாது என்பதைத் தெளிவுபடுத்து வது சித்தர்களின் கடமை.

# இயேசுவின் போதனையின் சாரமே மலைப்பொழிவு

இறைமகன் கிறிஸ்துவின் மண்ணக வருகையே இவ்வுலகில் இறையரசுக் கனவை நிஜமாக்கியது. இறையாட்சி என்பது கடவுளுடைய அன்பின் ஆட்சி யாகும். இவ்வாட்சியினை உலகில் நிலை நாட்டுவதனையே தன் இலட்சிய மாகக் கொண்டிருந்த இயேசு, அதனை தன் வாழ்வாலும் போதனையாலும் பறைசாற்றினார். மனிதனை அழிவுப் பாதைக்குள் இட்டுச்செல்லும் தீமை களைவென்று, தீயசக்திகளுக்கு எதிராக தனது செயற்பாடுகளை அமைத்து, அன்புச்செயல்கள் மூலம் மனிதனின் நலத்தில், அவனது வாழ்வில், உற வின் மகிழ்வில், அன்றாட செயற்பாடு களில் இறையரசு சார்ந்த எண்ணங் கள் உருவாக வழியமைத்தார். இறை யரசை நிறுவுவதும் அதை நெறிப் படுத்துவதும் இறைவனது வேலையாக இருந்தாலும், மனிதர்களே அதைத் தொடரவேண்டும் என்பது இயேசுவின் திருவுளமாகும். ஏனெனில் மனிதனின் உள்ளமே இறையாட்சிக்குரிய இடம். அவனது வாழ்வே இறையாட்சி. இறை யாட்சியின் மைந்தர்களின் வாழ்வை மாதிரியாகக் காட்டிய இறைமகன் அந்த வாழ்க்கை முறையை தன் போதனை களால் தெளிவுபடுத்தியுள்ளார். அவரு டைய போதனையின் சாரமும் வாழ்வின் வார்ப்புமாகவிளங்குவதேமலைப்பொழிவு.

பழைய ஏற்பாட்டில், இறைவன் இஸ்ராயேல் மக்களை தனது வழியிலே நடத்திச்செல்ல மோசே மூலமாக பத்துக் கட்டளைகளைக் கொடுத்து, தனது திட்டங்களையும் அவர்களது வாழ்க்கை ஒழுங்குகளையும் வெளிப்படுத்தினார். அதேபோல் புதியேற்பாட்டிலே இறை மகன் கிறிஸ்து மலைமீது அமர்ந்து மக்களுக்கு புதிய கட்டளைகளைக் கொடுக்கிறார். மலைப்பொழிவு இயே சுவின் போதனையினுடைய சாரம் என்பது தெளிவான உண்மையாகும். ''உலகில் உள்ள எல்லாப் புத்தகங் களும் அழிந்துபோனாலும் மலைப் பொழிவு மட்டும் இருந்தால் போதும் ஏனெனில் அதுவே என்னில் அகிம்சை யை விதைத்தது'' என்று கூறி இயேசு வின் மலைப்பொழிவின் உன்னத தன் மையை உலகிற்கு எடுத்துக்காட்டு கிறார் காந்தி அடிகள். ''நாம் அணு வைப் பிளக்க அறிந்து கொண்டோம் ஆனால் மலைப் போதனையை மறந்து விட்டோம்'' என்றார் நேரு. இவ்வாறு உலகிற்கு புத்துயிரூட்டி, மாந்தரை புனிதராக்கும் வழிகளை அவர்களுக்கு தெட்டத்தெளிவாக்கிறது இயேசுவின் மலைப்பொழிவு.

''ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே'' (மத் 5:3) என ஆரம் பிக்கும் இயேசுவினுடைய மலைப் போதனை, இறையாட்சியின் மைந்தர் களாக நாம் திகழ வேண்டுமென்றால் எம்மில் கொண்டிருக்க வேண்டிய பண்பு களை அடுக்கி வைக்கிறது. அவை எளிய மனம், துயருறுவோர் மீது பரிவு, கனி



வானமன நிலை, நீதியைவாழும் வாழ்வு, இரக்கக்குணம், சமாதான உறவு, துன்பத்தை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் என்பன வாகும்.

## பரமபிதா காட்டிய பாதை

எனவே, குழப்பங்களும் முரண் பாடுகளும், வன்முறைகளும் நிறைந்த எமது வாழ்விடங்களிலும், நாட்டிலும் அமைதியை நிலைநாட்டும் கருவி களாக நாம் துலங்கவேண்டும். கிறிஸ் துவின் வழியில் நடந்து ஏழ்மை நிலையை பின்பற்றி எமது வாழ்வால் கிறிஸ்துவின் மலைப்போதனைக்கு சான்றுபகரும்போதே நாம் இவ்வுலகில் மனிதராக வாழமுடியும்.

அருட்சகோ.றமேஸ் அ.ம.தி

# முத்துக்குமார் தீக்குளித்த இடத்தில் அஞ்சலி செலுத்த சென்ற 50பேர் கைது

இலங்கைத் தமிழர் பிரச்சினையின்போது தீக்குளித்து இறந்த முத்துக்குமாரின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதையொட்டி சென்னை கடவுச்சீட்டு அலுவலகம் அருகே முத்துக்குமார் தீக்கு ளித்த இடத்தில் அஞ்சலி செலுத்த தமிழர் எழுச்சி இயக்கம் முடிவு செய்திருந்தது.

அதன்படி அவ்வியக்கத்தினர் நேற்றுக் காலை அஞ்சலி செலுத்த வந்தனர். ஆனால் அதற்கு பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

அதனையும் மீறி வந்த 50 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

முன்னதாக, தமிழர் எழுச்சி இயக்கத்தினர், மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயர் பெயரான ஹடோஸ் சாலையின் பெயரை மாற்றி, தமிழ் இனத்திற்காக உயிர் நீத்த முத்துக்குமார் பெயர் சூட்டவேண்டும்.

பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும், உரிமைகளையும் பெற்றுத் தந்திட தமிழக அரசு முன்வரவேண்டும்.

தமிழ் மொழிப் போரில் உயிர் இழந்தவர்களுக்கு சிறப்பு செய்வதைப் போல, தமிழ் இனத்துக்காக உயிர்நீத்த முத்துக்குமார் உள்ளிட்ட 19 தியாகிகளுக்கு தமிழக அரசு சார்பில் நினைவு தூண் எழுப்ப வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். (ஸ்ரீ-2)

# மகரஜோதி குறித்து விசாரணை நடத்தும் திட்டம் இல்லை

## கேரள அரசு அறிவிப்பு

மகரஜோதி மனிதரால் ஏற்றப்படுவதா? இல்லையா ? என்பது குறித்து விசாரணை நடத்தும் திட்டம் இல்லை என்று கேரள மேல் நீதிமன்றத்தில் கேரள அரசு தெரிவித்துள்ளது.

சபரிமலை அருகே கடந்த 14ஆம் திகதி ஏற்பட்ட நெரிசலில் 102 பக்தர்கள் பலியானார்கள்.

இதுபற்றி விசாரணை நடத்தக்கோரி, முன்னாள் மேல் சாந்தி ஸ்ரீகுமார், பகுத்தறிவாளர் சங்கம் உட்பட 3 பேர் கேரள மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

இம் மனுவை விசாரித்த நீதிபதிகள் ராதாகிருஷ்ணன், பி.எஸ்.கோபிநாத் ஆகியோர் அடங்கிய தேவசம் அமர்வு, 'மகரஜோதி' எனப்படுவது , மனிதரால் ஏற்றப்படுவதா? என்றும், மகரவிளக்குக்கும், மகரஜோதிக்கும் இடையிலான வேறுபாடு குறித்தும் கேள்வி கேட்டனர்.

இதுபற்றி சபரிமலை தலைமை பூசாரி கண்டரரு மகேஸ்வரரு கூறுகையில், மகர ஜோதி என்பது வானில் தோன்றும் நட்சத்திரம் .

மகரவிளக்கு என்பது பொன்னம்பல மேட்டில் மனிதர்களால் ஏற்றப்படும் தீபம் என்றார்.

இந்நிலையில் கடந்த 27 ஆம் திகதி அன்று இம் மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகளின் கேள்விக்கு கேரள அரசு சார்பில் அரசு பிளீடர் விளக்கம் அளித்தார். அவர் கூறியதாவது,

மகரஜோதி, மனிதர்களால் ஏற்றப்படுவதா? அல்லது அது வானியல் அற்புதமா? என்பது குறித்து கேரள அரசு விசாரணை நடத்த விரும்பவில்லை.

இதை முதல்வர் வி.எஸ்.அச்சுதானந்தன் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளார். மகரஜோதி, இலட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கை சம்பந்தப்பட்டது என்பதால், அதுபற்றி விசாரணை நடத்த மாட்டோம் என்று அச்சுதானந்தன் கூறியுள்ளார் என அரசு பிளீடர் கூறினார்.

இதையடுத்து, இந்த விவகாரம் பொது நலன் சம்பந்தப்பட்டது என்பதால், இம் மனுக்களை மேல்விசாரணைக்காக தலைமை நீதிபதி செலமேஷ்வருக்கு மாற்றுவதாக தேவசம் அமர்வு அறிவித்தது. (ஸ்ரீ-2)

# வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்தியர்களின் பணத்தை திரும்பப் பெறவேண்டும்

## ராகுல்காந்தி வலியுறுத்து

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்தியர்களின் கறுப்புப் பணத்தை கண்டுபிடித்து திரும்பக் கொண்டு வர இன்னும் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என, ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி மராட்டிய மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

அவுரங்கபாத்தில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர்,

இந்திய அரசியல் கட்சிகளில் ஜனநாயகம் இல்லை. கட்சிகளில் ஜனநாயகம் இருந்தால்தான் அது நாட்டுக்கு நல்லதை தர முடியும். எங்களைப் பொறுத்த வரை கட்சியில் இளைஞர் காங்கிரஸ் தேர்தலை உண்மையாக நடத்தி இருக்கிறோம்.

இளைஞர்கள் அரசியலுக்கு வர ஆர்வம் காட்டவேண்டும். இதை அவர்கள் தங்களுடைய கடமையாகக் கருத வேண்டும். இளைஞர்கள் அதிக அளவில் அரசியலுக்கு வரும் வகையில் அரசியல் அடிப்படைகளே மாற வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் 10 வருடத்தை அரசியலுக்காக ஒதுக்குங்கள். இதன்மூலம் நிச்சயம் பெரும் மாற்றத்தை உருவாக்க முடியும். தற்போது கெட்டுக்கிடக்கும் இந்த அரசியல் அடிப்படைகளை நம்மால் மாற்றமுடியும். என்னுடைய முழுக் கவனமும் அதில்தான் இருக்கிறது. அரசியல் என்பது எல்லோரும் எளிதாகப் பங்குபெறும் வகையில் திறந்த கதவாக இருக்க வேண்டும்.

அரசியல் என்றாலே ஊழல்தான் என்று பொதுமக்கள் நினைக்கிறார்கள். அரசியல் நடைமுறைகள் இப்போது இருப்பதுபோல தொடர்ந்தால் மக்களிடம் இந்த எண்ணம் தான் மேலோங்கும். எனவே அரசியல் அடிப்படைகளையே மாற்றி அமைத்தால்தான் இதை தடுக்கமுடியும். என்னை அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி பிரதமர் பதவிக்கு முன் நிறுத்தும் என்று நீங்கள்(நிருபர்கள்) சொல்வது உங்களுடைய அனுமானம். நான் அப்படிக் கருதவில்லை. ஆனால் அரசியல் அமைப்பை திருத்த வேண்டும் என்பதையே நான் ஒரே குறிக்கோளாக கொண்டுள்ளேன்.

வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் இந்தியர்களின் கறுப்புப் பணத்தை கண்டுபிடித்து திரும்பக் கொண்டு வர இன்னும் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இது இந்தியாவின் பணம், இந்திய மக்களின்பணம். அதை விடக்கூடாது. இந்தப் பணம் திரும்ப வரும் என்ற உத்தரவாதமும் வேண்டும் என்றார். (ஸ்ரீ)




# தமிழக மீனவர் படுகொலையை கண்டித்து நாகையில் வைகோ உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலைக் கண்டித்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி நாகபட்டினத்தில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் உண்ணா விரதப் போராட்டம் நடைபெறும் என்று அக் கட்சி அறிவித்துள்ளது.



இது தொடர்பாக ம.தி.மு.க தலைமை அலுவலகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் அன்றாட நிகழ்வாகிவிட்டது. கடந்த 30 ஆண்டுகளாக இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்து தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனை இந்தியக் கடற்படையும் கடலோர காவற்படையும் வேடிக்கை பார்ப்பதோடு இலங்கை கடற்படைக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றன.

இலங்கைக்கு மத்திய அரசு எச்சரிக்கை விடுத்திருந்தால் மீனவர்கள் கொல்லப்படுவதை தவிர்த்திருக்கலாம். ஆனால் மத்திய அரசு தனது கடமையைச் செய்யவில்லை.

இலங்கைக் கடற்படையின் அட்டூழியங்களை நியாயப்படுத்தும் வகையில் பிரத மர், உள்துறை அமைச்சர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோரின் கருத்துக்கள் அமைந்துள்ளன. மத்திய அரசுக்கு கடிதங்கள் எழுதி முதல்வர் கருணாநிதி கண்துடைப்பு நாடகம் நடத்தி வருகிறார்.

இதனைக் கண்டித்தும் தமிழக மீனவர்களை பாதுகாக்க வலியுறுத்தியும் மேற்குறித்த திகதியில் நாகபட்டினத்தில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# 74 பேருக்கு கலைமாமணி விருது; முதல்வர் கருணாநிதி அறிவிப்பு




(சென்னை)

தமிழக அரசின் கலைமாமணி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. எழுத்தாளர்கள் சா. கந்தசாமி, நாஞ்சில் நாடன், ராஜேஷ்குமார் ஆகியோரின் பெயர்கள் விருது பெறுவோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இதேபோன்று திரைத்துறையில் நடிகர் ஆர்யா, நடிகைகள் அனுஷ்கா, தமன்னா, மாளவிகா ஆகியோரும் விருது பெறுகின்றனர்.

கலைத்துறையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் கலைஞர்களைப் பாராட்டி தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றம் ஆண்டு தோறும் கலைமாமணி எனும் மாநில அள விலான விருதினை வழங்கிச் சிறப்பு செய்து வருகிறார்.

விருதுபெறும் ஒவ்வொரு கலைஞருக்கும் பொற்பதக்கம் வழங்கப்படுகிறது. 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளுக்கான கலைஞர்களைத் தெரிவு செய்து தமிழ்நாடு இயல், இசை, நாடகமன் றம் அரசுக்குப் பரிந்துரை செய் துள்ளது.

இதற்கமைய விருதுபெறுவோரின் பெயர் விபரங்களை முதல்வர் கருணாநிதி வெளியிட்டுள்ளார்.

இதில் நடிகர் ஆர்யா, சின்னி ஜெயந்த், கருணாஸ், நடிகைகள் அனுஷ்கா, தமன்னா, ரோகிணி, சரண்யா, இசையமைப் பாளர் பரத்வாஜ், ஒளிப்பதிவாளர் ராஜீவ்மேனன், எழுத்தாளர்கள் சா.கந்தசாமி, ராஜேஷ்குமார், நாஞ்சில் நாடன், இலக்கியச் சொற்பொழிவாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, சின்னத்திரை இயக்குநர் திருமுருகன், சின்னத்திரை நடிகர்கள் பூவிலங்கு மோகன், சாக்ஷிசிவா, சின்னத்திரை நடிகை மாளவிகா, சின்னத்திரை கலைஞர் ரோபோ சங்கர் உள்ளிட்ட 74 பேருக்கு இவ்விருதுகள் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ)

# ஹபீஸ் சதம்; அப்ரிடி அதிரடி
# பாகிஸ்தான் அணி அபார வெற்றி

(கிரிஸ் சேர்ச்)

மொகமெட் ஹபீஸின் சிறப்பான சதத்தின் மூலம் பாகிஸ்தான் அணி 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தித் தொடரைச் சமன் செய்தது.

நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி ஆறு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றுத் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று கிரிஸ் சேர்ச்சில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ரோஸ் ரெய்லர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஹபீஸ், அப்ரிடியின் அபார ஆட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 293 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் மொகமெட் ஹபீஸ் 144 பந்துகளில் (12 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 115 ஓட்டங்களையும் 19 பந்துகளில் அரைச்சதம் கடந்த சகிட் அப்ரிடி 25 பந்துகளில் (5 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 65 ஓட்டங்களையும் உமர் அக்மல் 44, யூனிஸ் கான் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மில்ஸ், சௌத்தி, பென்னற் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஓரம் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 250 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.


இதில் ஸ்ரைரிஸ் 46, வில்லியம்ஸன் 42, குப்தில் 39, ஹவ் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் சொகைல் தான்வீர், வாஹாட் றியாஸ், உமர் குல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சயிட் அப்ரிடி, மொகமெட் ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் 6 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரைப் பாகிஸ்தான் அணி 1:1 என்ற கணக்கில் சமனிலையாக்கியது.

இத்தொடரின் நான்காவது போட்டி நாளை மறுதினம் நடைபெறுகின்றது.

இப்போட்டியில் சதமடித்துப் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த மொகமெட் ஹபீஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.





# பிரியலக்ஷன் சகல துறையிலும் அசத்தல்
# யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றி

பிரியலக்ஷனின் சகல துறை ஆட்டத்தின் மூலம் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி அணி ஒரு விக்கெட் வித்தி யாசத்தில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை வென்றது.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மட்ட 19 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவருகிறது.,

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான இருநாள் இன்னிங்ஸ் போட்டி நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்கள்ள எடுத்தது.

இதில் ரி.பிரியலக்ஷன் 51 ஓட்டங்களையும் பி.சிறிகுகன் 46 ஓட்டங்களையும் என்.கஜேந்திரன் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சென் ஜோன்ஸ் கல்லூரி சார்பாக ரி.விமல்ராஜ், எஸ்.பிரியதர்ஷன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 129 ஓட்டங்களை எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்து பொலோன் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதில் ஜே.ஏபிரியன் 27, எஸ்.விற்றரிவதனன் 19, எஸ்.டக்ஷன் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக ரி.பிரியலக்ஷன், பி.சிறிகுகன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வி.கோபிநாத் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 123 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 190 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் 68 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

துடுப்பாட்டத்தில் எஸ்.றஜீந்திரன் 91 ஓட்டங்களையும் எஸ்.டக்ஷன் 20, எஸ்.சஞ்ஜீவன் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரி.பிரியலக்ஷன், ஆர்.பென்டில்கரன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் கே.பிரசோபனன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் இறுதிவரை போராடி 9 விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ரி.பிரியலக்ஷன் 17, எஸ்.சீராளன் 14, கே.பிரசோபனன் 07 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வி.ஹரிவதனன் 3 விக்கெட்டுக்களையும் எஸ்.டக்ஷன், எஸ்.பிரியதர்ஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 30 ஆண்டுகளின் பின் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெண்டுல்கரின் விளம்பர வருமானம்
# 1.5 கோடி ரூபாய் நாளொன்றுக்கு

(புனே)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆரம்பமாகும் நேரத்தில், மீண்டும் விளம்பர உலகில் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளார் இந்திய வீரர் சச்சின். கடந்த ஒரு மாதத்தில் நாள் ஒன்றுக்கு ரூபா 1.5 கோடி (இந்திய ரூபாயில்) சம்பாதித்துள்ளார்.

கிரிக்கெட் அரங்கில் எண்ணற்ற சாதனைகளுக்குச் சொந்தக்காரர் சச்சின் டெண்டுல்கர். உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகும் நிலையில் இவரது விளம்பர வருமானம் பன்மடங்கு அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

சமீபத்தில் கோக கோலா நிறுவனம் சச்சினை ரூபாய் 20 கோடிக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்திருந்தது. இந்நிலையில் புனேயிலிருந்து செயற்படும் அமித் என்டர்பிரைசஸ் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனம் சச்சினை ஒன்பது கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அத்துடன் ரூபாய் 2.5 கோடி மதிப்புள்ள இரண்டு பங்களாக்களும் இவருக்கு வழங்கப்படவுள்ளது.

**பிரபலமாக வாய்ப்பு**

இது குறித்து இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கிஷார் படேல் கூறுகையில், சச்சினை ஒப்பந்தம் செய்ததன் மூலம் நாடு முழுவதும் எங்களது நிறுவனம் பிரபலமாக வாய்ப்புள்ளது.

**நாள் வருமானம்**

இது தவிர எஸ்.குமார்ஸ் என்ற தேசிய அளவில் செயற்படும் ஜவுளி நிறுவனம் இவரை ரூபாய் 13 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

மொத்தத்தில் இந்த மாதம் மட்டும் சச்சின் ரூபாய் 40 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் கடந்த 27 நாட்களில் இவரது சராசரி நாள் வருமானம் ரூபாய் 1.5 கோடியை எட்டியுள்ளது.

**சச்சினின் பெயரில் வீதி**

குவாலியர் ஒருநாள் கிரிக்கெட்டில் இருநூறு ஓட்டங்கள் எடுத்துச் சாதித்ததைப் போற்றும் வகையில் குவாலியரிலுள்ள வீதிக்குச் சச்சினின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி (2010) மாதம், 24ஆம் திகதி இந்திய, தென்னாபிரிக்க அணிகள் மோதிய போட்டி குவாலியரில் நடந்தது. இதில் இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முதன் முதலாக 200 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற புதிய சாதனையைப் படைத்தார். இதனிடையே இந்திய மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்திலிருந்து ஹுரவ்லி கிராமம் வரையில் ரூபாய் 2.89 கோடிக்கு 3.55 கி.மீ நீளத் தில் நான்கு வழி வீதி சமீபத்தில் அமைக்கப்பட்டது. இந்தப் புதிய வீதிக்குச் சச்சின் இரட்டைச் சதத்தை நினைவுபடுத்தும் வகையில் 'சச்சின் டெண்டுல்கர்' வீதி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி மகிந்தவுக்கு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது சட்டத்திற்கு புறம்பாகக் கொலைகள் செய்ததாக குற்றம் சுமத்தி அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தால் ரஜீகர் மனோகரன், பிரேமாஸ் ஆனந்தராஜா மற்றும் கலைச்செல்வி லவனின் கணவர் ஆகியோர் கொல்லப்பட்டதாகவும், அவர்களின் சார்பாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள தான் முப்பது மில்லியன் டொலர் நஷ்ட ஈட்டுத் தொகை கேட்டுள்ளதாகவும் சட்டத்தரணி புரூஸ் பெய்ன் கூறினார்.

சித்திரவதை மற்றும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் அமெரிக்க மண்ணுக்கு வெளியே நடந்து இருந்தாலும் சட்டப்படி அவற்றுக்குத் தண்டனை வாங்கி கொடுக்க முடியும்.

இலங்கையில் மறைந்து கொண்டால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீதியிடம் இருந்து தப்ப முடியாது என்றும் அவர் கூறினார்.

2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்டப் போர் உட்பட படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட மூன்று தாக்குதல் நடவடிக்கைகளின் போது தமது உறவினர்களை இழந்த அமெரிக்காவில் வாழும் மூவரின் சார்பில் இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபரும் பிரபல வழக்கறிஞர்களில் ஒருவருமான புரூஸ் பெய்ன் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

சித்திரவதைகள் போர் நியமங்கள் மற்றும் சட்டத்திற்கு எதிரான படுகொலைகள் தொடர்பாக வெளிநாட்டவர்களுக்கு எதிராக அமெரிக்காவில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கும் 1991ஆம் ஆண்டின் சட்டம் ஒன்றின் கீழேயே இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்கறிஞர் புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒளிந்து கொண்டிருப்பதன் மூலம் சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளால் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டத்தின் நீதியின் கரங்களில் இருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தப்பமுடியாது என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இவ்வழக்கிற்கு பொறுப்புக் கூறுவது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து பதில் கிடைக்காது விட்டால் அவர் நீதிமன்றத்தில் சமுகம் அளிக்காமலேயே தீர்ப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என இவ்வழக்கைத் தாக்கல் செய்த பின்னர் புரூஸ் பெய்ன் கூறியுள்ளார்.

இவ்வழக்குத் தொடர்பில் திருகோணமலையில் கொல்லப்பட்ட மாணவன் ரஜீவனின் தந்தை மனோகரன் கூறியதாவது,

எனது முக்கிய கோரிக்கை நல்ல ஒரு தீர்ப்பு கிடைக்கவேண்டும் அதற்காகத்தான் இந்த சிவில் வழக்கை போட்டிருக்கிறோம். அதாவது ஒவ்வொரு முறையும் ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கிறோம்.

ஜனாதிபதியால் ஒரு குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டு அதில் எந்த தீர்ப்பும் கிடைக்காமல் வழக்கு மூடப்பட்டிருக்கிறது. நல்லிணக்க ஆணைக்குழு என்று ஒன்று தொடங்கி இருக்கிறது. அதனாலும் எந்த தீர்வும் கிடைக்கப் போவதில்லை இல்லை. அது எனக்கு தெரியும்.

அதனால்தான் இந்த வழக்கை நாங்கள் அமெரிக்காவில் தாக்கல் செய்தோம்.

திருகோணமலையில் இந்தக் கொலை வழக்கு ஒவ்வொரு மாதமும் கூப்பிடப்பட்டு தவணை போடப்படுகிறது. அதற்கான எந்த ஒரு தீர்வும் காணப்படவில்லை.

எனக்கு அறிந்த அளவுக்கு நான் தெளிவாகத்தான் வந்திருக்கிறேன். ஐந்து வருடங்கள் முடிந்த பிறகுதான் நான் இந்த நிலைக்கு தூண்டப்பட்டிருக்கிறேன்.

ஜனாதிபதி மிக அண்மையில் மகேஸ்வரன் கொலை வழக்கில் சொல்லி இருக்கிறார் தனக்கு ஆட்களைத் தெரியும் என்று. இதுவும் கட்டாயமாக அவருக்கு தெரியாமல் இல்லை.

ஜனாதிபதி என்ற ரீதியில் அவருக்கு மதிப்பு கொடுக்கிறேன். அவருக்கும் எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. எந்த மனஸ்தாபமும் இல்லை. நான் ஒரு அரசியல்வாதி இல்லை. ஆனால் அவரால் இந்த வழக்கை வெளிக் கொண்டு வரமுடியும் என்றபடியினால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றார். (ச-5)

## உயர்பாது...

அதிகாரிகளுக்கும் கிழக்கு மாகாண ஆளுந ருக்கும் இடையில் திருகோணமலையில் சந் திப்பு நடைபெற்றுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் தங்கி யிருந்த மக்கள் மாற்று இடங்களில் குடியேறு வதற்கு விரும்பவில்லை என ஐ.நா. அதிகாரி கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என ஆளுநர் அறிவித்துள் ளார். (ச-5)

## தாக்கல் செய்யப்பட்ட வேட்...

1282 வேட்பு மனுக்களும், சுயேட்சை குழுக் களிடமிருந்து 765 வேட்பு மனுக்களுமாக 2047 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் அரசியல் கட்சிகளின் 1134 வேட்பு மனுக்களும், சுயேட்சைக் குழுக்களின் 463 வேட்பு மனுக்களும் என 1597 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசியல் கட்சிகளின் 148 வேட்பு மனுக்களும், சுயேட்சை குழுக்களின் 302 வேட்பு மனுக்களும் என மொத்தமாக 450 வேட்பு மனுக்கள் நிராகரிக் கப்பட்டுள்ளன.

301 உள்ளூராட்சி மன்றங்களில் 3931 உறுப் பினர்களை தெரிவு செய்வதற்காக மொத்தமாக 2047 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உள்ளூ ராட்சி மன்றங்கள் அடங்கலாக நாட்டில் 335 உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன.

25 மாவட்டங்களில் மொத்தமாக 335 உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்ற நிலை யில் 267 சபைகளின் ஆட்சிக்காலம் கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு கலைக்கப்பட்டன.

அத்துடன் ஏற்கெனவே ஆட்சிக்காலம் முடிபடைந்திருந்த நிலையில்;தேர்தல் தொடர்ச் சியாக ஒத்திவைக்கப்பட்டு வந்த 34 சபைக ளுக்கும் என மொத்தமாக 301 சபைகளுக்கே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது என்றார். (ச-5)

## ஈபிடிபியின் முக்கிய உறு...

எனினும் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்திகள் வந்தபோதும் ஈபிடிபி அமைப்பு அதனை உறுதிப்படுத்தவில்லை. கூரிய ஆயு தம் ஒன்றினால் தாக்கிய அடையாளங்கள் தலையில் காணப்படுவதாகவும் சடலம் வீதி யோரமாக அநாதரவாக கிடந்ததாகவும் அவர் கள் கூறுகின்றனர்.

ஆட்கள் நடமாட்டமற்ற பகுதி இதுவாகும் காலையில் தனியதாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இவர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகி றது.

இவர் சுட்டுக்கொல்லப்பட்டாரா, தாக்கப்பட்டு உயிரிழந்தாரா அல்லது விபத்தில் உயிரிழந் தாரா என்பது குறித்து மரண விசாரணையின் பின்பே தெரியவரும் என கூறப்பட்டது.

இராசரத்தினம் சதீஸ் ஈபிடிபி அமைப்பின் ஊடக பொறுப்பாளராகவும் பின்னர் மருதங் கேணிப்பகுதியின் அமைப்பாளராகவும் நிய மிக்கப்பட்டிருந்தார். இவர் வடமராட்சியின் பருத் தித்துறையைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தகது. (எ-1,24)


சகரம் | Dan | www.JAFFNA TODAY.com

தொலைக்காட்சி | வானொலி | பத்திரிகை | இணையம்

ஊடகக் கற்கைநெறிகள்

வகுப்புகள் நடைபெறுகின்றன

பிரதான பாடங்கள்:
பத்திரிகையியல், வானொலி, தொலைக்காட்சி, இணையம்



துணைப் பாடங்கள்:
Photography, Graphic Designing, Marketing, English

இலவசம் Microsoft Office, Internet, Email, Web Search, Social Media பயிற்சிகள்

3மாத கற்கைநெறி + 3மாத பணியிடப் பயிற்சி
பயிற்சிநெறி முடிவில் தொழில் உத்தரவாதம்

சிகரம் ஊடக இல்லம்
MEDIA
இல.224, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 77 33 931.



Diploma Courses
upto 90%Discount.

Ms Office - Rs. ~~2400~~
Multimedia - Rs. ~~3600~~
Accounting - Rs. ~~3600~~
AutoCAD-2&3D - Rs. ~~6000~~
Web Development - Rs. ~~27000~~

அனைத்து மாணவர்களுக்கும் Free Dip. English ICDL DTP Typing

SMS your name & course to 772 395 895 & Get Schol.

Rs.800 Upwards

MCS New Batch on 31.01.2011

Supported By UNDP/JRRP

324, Palaly Road, Parameswara Junction


## பணத்துக்காக வழக்குத்...

எனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்தார்.

இவர் அமெரிக்காவில் சுமார் பத்து நாட் கள் தங்கி யிருப்பார் என அறிவிக்கப்பட்டிருந் தது.

1991ஆம் ஆண்டு அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளால் பாதிக்கப்பட்டோர்,

பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் சித்திரவ தைகள், துன்புறுத்தல்கள் மற்றும் படுகொலை களை மேற்கொண்ட வெளிநாட்டவர்கள் அமெரிக்காவுக்கு வருகின்ற தருணத்தில் அவர் களை கைது செய்வதற்கான அதிகாரம் அந் நாட்டு நீதிமன்றங்களுக்கு உண்டு. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்தவருடம் நவம்பர் மாதம் லண்டனுக்கு மேற்கொண்டிருந்த விஜயத் தின் போதும் அவரை கைது செய்யும்படி வலி யுறுத்தி இடம்பெற்ற தொடர்ச்சியான போராட் டங்களால் அவர் திடீரென நாடு திரும்பியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புலிகளின்...

டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சட்டத்தின் முன்னால் அடிபணிய வைக்கலாம் என அமெ ரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புக்கள் முயற் சித்த போதும் அவை கைகூடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் தமிழ் என்ற பெயரை பயன்படுத்துகின்ற பலர் தற்போது பயங்கர வாத அமைப்புகளுக்கு ஆதரவளிப்பவர்களா கவே இருப்பதாக வும் ஜாலிய விக்கி ரமசூரியசுட்டிக்காட் டியுள்ளார். (ச-5)

## கூட்டமை...

வெளிநாட்டுவிஜயம் காரணமாக பேச்சுவார்த்தை திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட் டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை கள் அரசியல் தீர்வு,மீள்குடியேற்றம் உள் ளிட்ட முக்கியமான விடயங்களை அடிப்படை யாக கொண்டு நடைபெறவுள்ளதாக ஜனாதி பதி செயலகத்தை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-5)


City & Guilds International English Qualifications

Spoken English & Diploma in English

Disgned for those who need English for work, study, Travel or Migration

International Esol
(English for speakers of other language)
assesses the learner`s Reading Writing and Listening Skills.

International Spoken ESOL
(Spoken English for speakers of other Language)
assesses the learner's Speaking skills



Why City & Guilds English Qualifications?
- Recognized by UK Universities and UK Border Agency
- Directly Linked to the Common European Framework
- Certificate for Lifetime

Course contents :
* Advanced Reading
* Advanced Writing
* Speaking Practice
* Listening Practice

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் ஒரே ஒரு பாடநெறி City & Guilds இன் Diploma in English மட்டுமே 03 மாதங்களில் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| Course Schedule | Saturday - Sunday | |
|---|---|---|
| Duration | 3 Months (100 hours) | Registration : Rs 500/= |
| Time | 8.30.11.30 a.m | Course Fee :100 /= per hour |
| Commencement | 05.02.2011 | |

வகுப்புகள் 05.02.2011 ஆரம்பம்

City & Guilds - Approved Center
BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P:0213216027 - 0778803887
திருநெல்வேலி சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்



9 ஆவது ஆண்டு நினைவு



தோற்றம் 15 12 1943

மறைவு 07 02 2002

அமரர் வாதவூர் தவச்செல்வம்
(சமாதான நீதவான், வேலணை)
திதி:-30.01.2011

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சங்களில் நீங்காதிருக்கும்
உங்கள் ஆத்மா என்றும்
சிவன்பாதத்தில் இருக்கப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

குடும்பத்தினர்

21/3 A, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.



வீடு விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு மானிப்பாய் முச்சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள 3 பரப்பு காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு : TP No.: 0779301745, 0776917155 (3606)



நிழல் அல்ல; நிஜம்!!

ஒரே வாரத்திலே!

- உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்! முகப்பருக்கள், முகச்சுருக்கம், கருவளையம், உதடுகருமை நீக்கம், கழுத்து கருமை நீக்கம், தழும்புகள் போன்ற வற்றிற்கான சிகிச்சைகள்.
- வயிறு மற்றும் இடுப்பு, கைத்தசைகள் குறைப்பதற்கான சிகிச்சைகள் மற்றும் உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல், முடி உதிர்வு, இளநரை போன்றவற்றுக் கான சிகிச்சைகள்,

"முற்றிலும் இயற்கை மூலிகைச் சிகிச்சைகள்" "WE CARE ALWAYS"

பதிவுகளை முற்கூட்டியே தெரிவிக்க அழையுங்கள்: 0777351954, 0774011129

SANEYA BEAUTY PALACE
132, KACHCHERI NALLUR ROAD, JAFFNA (கிட்டுப்பூங்கா அருகாமை) (3604)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.